# விளம்பரம்

VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 17

SEPTEMBER 01, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

*என்னுடைய சேவையே, எனது வெற்றி



❄ கவலையாய் இருக்கும் போது தனிமை தவறு (பக்.13)

❄ பெண்கள் இளமையைப் பெற... (பக். 4)

❄ புதிய வீட்டிற்கு போகுமுன் கவனிக்கவேண்டியவை(பக்.13)

❄ "அம்மாடி.."!சகோதரியை அழைக்கும் சிவாஜி (பக்.7)



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

**சபோனாவிற்கு!**

**Sabona & Gift**

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

Markham / Eglinton

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)



❄ 2024ம் ஆண்டு கனடாவில் பூரண சூரியகிரகணம்!! (பக். 2)

❄ 1999ம் ஆண்டு Or 2000ம் ஆண்டு கார் வாங்குவது சிறந்தது? (பக். 3)

❄ "WORLD CHAMPION" அவுஸ்திரேலியா, இலங்கை கிரிகெட் அணியிடம் படுதோல்வி (பக்.6)

❄ கார் சாரதிக்கு காரைப்பற்றி அறிந்திருக்க வேண்டுமா? (பக்கம் 10)


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ புறவுலகில் நீ படைத்துள்ள பொருள் மதிப்புக்குரியதன்று. மனத்தகத்து நீ படைத்துள்ள மாண்பே மதிப்புக்குரியது.

☞ நல்வாழ்வுக்கேற்ற தீர்மானத்தை தினமும் புதுப்பித்துக்கொள். தகாத எண்ணங்கள் மனதை வந்து தாக்கும் போது நெறியினின்று நழுவாதே.

☞ தனது நிஜ சொரூபத்துக்கு ஏற்ப நடந்து கொள்ளாதவன் அழிந்து பட்டுப்போகிறான். தனது பேரியல்பை வெளிப்படுத்துபவன் பெரியவன் ஆகிறான்.

☞ மாறுபாடு அடைந்து கொண்டே வருவது வாழ்க்கையைப் பற்றிய மாறாத கோட்பாடு ஆகும். முரண்பாடு போன்ற ஒழுங்குப்பாடு இதுவேயாம்.

☞ உலக நன்மைக்கு உழைப்பவனிடத்து அறநெறி தழைத்தோங்குகிறது.

## உலகக் கோலங்கள்

**கொண்டுரஸ் (Honduras)** - சிவ பஞ்சலிங்கம்

மத்திய அமெரிக்காவில் உள்ள மிகவும் வறிய நாடுகளில் ஒன்றாகும். இந்நாட்டில் வடக்கு எல்லையாக கரீபியன் கடலும், கிழக்கு எல்லையாக குவாற்ற மாலா (Guatemala) தெற்கு எல்லையாக "எல்ச்வடோர்" (Elsalvador) மற்றும் நிக்கரகுவா (Nicaragua) நாடும் உள்ளது.

**இதன் பரப்பளவு:** 43,278 ச..மை

**மக்கள் குடித்தொகை:** 5,462 000 பேர் (1982ம் ஆண்டு புள்ளி விபரப்படி)

**தலைநகரம்:** ரெகுசிஹல்பா [Tegucigalpa] நாட்டின் மத்தியில் உள்ளது.

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர்கள் - 97% கிறிஸ்தவர்கள் - 3%,

**பேசும் மொழி:** ஸ்பானிஷ், புராதன பாணியிலான பாஷைகள்

**சுதந்திரம் அடைத்த தினம்:** செப்ரெம்பர் 15/1821ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிடமிருந்து சுதந்திரம் பெற்றது. பின்னர் ஜனவரி11/1982 இல் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது.


(தொடர்ச்சி 10ம் பக்கம்)


## உன்னை அறிந்தால்

"இரவும் வரும் பகலும் வரும் உலகம் ஒன்றுதான் உறவும் வரும் பிரிவும் வரும் மனித இனம் ஒன்றுதான்..." இதில் எந்தவித மாற்றமும் இல்லை. மாறுவதும் இல்லை. மாறப்போவதும் இல்லை.

நாம் எம்மை மாற்றிக் கொள்ளாமல் எந்த வித மாற்றமும் நடைபெறப் போவதில்லை. நாளைய பொழுது மாற்றமாக இருக்க, இன்றைய நாளில் நாம் மாறப் பார்க்க வேண்டும் அல்லது மாற்ற வேண்டும். ஒரேமாதிரியே இருந்து கொண்டு அல்லது ஒரே மாதிரி செயலைச் செய்து கொண்டு வேறுவிதமான அல்லது வித்தியாசமான முடிவை எதிர்பார்க்க முடியாது. முடிவு மாறவேண்டுமாயின் செயலில் மாற்றம் தேவை. ஒரு செயலில் தோலிவியே தொடருமாயின், வெற்றிக்கு செயலின் செய்கையில் மார்றம் தேவை. நாளைய பொழுது என்றும் நல்ல பொழுதாக எம்முடையசெயலில் திறமை தேவை. சிந்திக்க கூடிய நேரத்தை செலவழித்து, செயல்பாட்டில் நேரத்தை குறைக்கவும். வெற்றியின் படிக்கு இதுவும் ஒரு காரணம்.

*நெற்றிக்கண்ணன்*


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM



SINGAPORE CELLULAR

Bell Mobility

$50.+Tax per Month


CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD. SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (40)



- விஜே குலத்துங்கம்

அண்மையில் அதாவது ஆகஸ்ட்டு மாதம் 11ந் திகதி ஒரு பூரண சூரிய கிரகணம் ஏற்பட்டது. ஐரோப்பாவிலும் மத்தியதரைக் கிழக்கு நாடுகளிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் இதை தெட்டத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஒரு காலத்தில் நிலவைப் பார்க்க முடியும், ஆனால் அணுக முடியாது என நம்பப்பட்டது. ஒரு சாரார் சந்திரன் ஒரு கடவுள், சந்திரனை பாம்பு விழுங்கும் பொழுது சந்திர கிரகணம் ஏற்படுகின்றது, அதைப் பாம்பு தன் வாயிலிருந்து கக்கியவுடன் தொல்லைகள் நீங்கிவிடும் என்றும் கருதினார்கள். நீல் ஆரம்ஸ்ரோங் சந்திரனில் காலடி வைத்தவுடன் அந்த மூட நம்பிக்கை பெருமளவில் குறைந்தது. சந்திர கிரகணம் ஏற்படும் பொழுது அதையிட்டு மக்கள் அவ்வளவாகப் பயப்பட்டதில்லை. ஏனெனில் இரவு நேரத்திலேயே இது நடைபெறுவதால், முகில்கள் மூடியது போன்றோ அமாவாசை என்றோ நினைத்திருப்பார்கள். ஆனால் சூரிய கிரகணம் அப்படியல்ல. நடுப்பகல் வேளையில்கூட சூரியன் மறைந்து முழுதாக இருட்டி, பின்னர் சிறிதுநேரத்தில் விடிவது போன்று சூரியன் மீண்டும் தோன்றும். இந்த சந்திர, சூரிய கிரகணங்கள் எவ்வாறு தோன்றுகின்றன எனப் பார்ப்போம்.

சூரியன் ஒரு நிலையான இடத்தில் நிற்கின்றது. பூமி தன்னைத்தான் சுற்றியும், அதே நேரத்தில் சூரியனையும் சுற்றி வருகின்றது. அதே நேரத்தில் சந்திரன் பூமியை சுற்றி வருகின்றது. இது அனைவருக்கும் தெரிந்த விடயம். இப்படியாக சந்திரன், பூமியையும், பூமி சூரியனையும் சுற்றும்போது, இரு வெவ்வேறு நிலைகளில் இவை மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரச் சந்தர்ப்பம் உண்டு. ஒருவிதமான நிலையில் பூமியானது சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையில் இருக்கும் வகையில் ஒரு நேர்கோட்டில் வரலாம். சந்திரனில் சூரிய ஒளிபடும் போதுதான், சந்திரன் பிரகாசித்து ஒளியைப் பரப்பும். ஆனால் நேர்கோட்டில் வரும்போது சூரியனின் எதிர்ப்பக்கத்தில் நிலயை நோக்கியிருக்கும் பூமியின் மேற்பரப்பில் பூரணை நாளாக இருக்கும் போது பூமி நேர் கோட்டில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையில் வருவதால், சூரியவெளிச்சம் சந்திரனில் படாது பூமி மறைப்பதால், சந்திரன் ஒளியை இழப்பதால் சந்திரன் வானத்தில் இருந்தாலும் ஒளி இல்லாததால், சந்திரன் இல்லாதது போன்ற தோற்றம் ஏற்படும். இதுவே சந்திர கிரகணம் ஏற்படக் காரணமாகும். பூமி மெதுவாக இடையில் வரும்போது, படிப்படியாக சந்திரன் ஒளி மறைக்கப்படும் போது, படிப்படியாக சந்திரன் தேய்ந்து பிறையாகி பின்னர் முற்றாக மறையும்.

மற்றொரு நேர்கோட்டு நிலையின் போது, சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் வருகின்றது. சூரிய வெளிச்சம் பூமியில் படாதவாறு சந்திரனை மறைப்பதால், சூரிய கிரகணம் ஏற்படுகின்றது. சூரியன் மிகப்பெரியது, சந்திரனை விட 400 மடங்கு பெரியது. எனவே எப்படி சூரியனை சந்திரன் மறைக்கக் கூடியதாக உள்ளது? சூரியன் சந்திரனை விட 400 மடங்கு தூரத்தில் உள்ளது. எனவேதான் சூரியன் சிறியதாக சந்திரனை ஒத்த அளவாக உள்ளது. சந்திரனின் சுற்றும்பாதை பூமியின் சுற்றும் பாதையிலிருந்து 5 பாகை சரிந்து உள்ளது. இதனால் அதிகமான சந்தர்ப்பங்களில் நேர்கோட்டில் வந்து கிரகணம் உண்டாவதில்லை. அத்துடன் சந்திரன் பூமியிலிருந்து தூரத்தில் இருக்கும் போது, சூரியனை முற்றாக மறைக்காது. நடுவில் மாத்திரம் மறைக்கும். இதை Annular Eclipse எனக் கூறுவார்கள். அத்துடன் சந்திரனின் ஒரு பகுதி மாத்திரம் நேர்கோட்டில் வரும்போது பகுதி கிரகணம் (Partial Eclipse) உண்டாகும். எனவே பூரண சூரியகிரகணம் ஏற்படுவது குறைவு. 100 வருடங்களில் 70 பூரண சூரிய கிரகணங்கள் தான் ஏற்படும். அத்துடன் சரியாக நேர்கோட்டில் இருக்கும்போது, பூரண சூரிய கிரகணமாக தெரியும் பகுதி, பூமியின் கடற்பகுதி அல்லது மனிதர்கள் புகமுடியாத அடர்ந்த காட்டுப்பகுதியாகவும் அமைந்துவிடும்.

எனவே பூரண சூரிய கிரகணத்தை பார்ப்பதற்கு ஒருவருக்கு வாழ்நாளில் ஒருதரம் கூட கிடைப்பது மிகவும் அரிது. எனவே ஆர்வமுள்ளவர்கள் தூரதேசம் என்றாலும் அந்த நாடுகளுக்கு சூரியகிரகணத்தை பார்க்கச் செல்வார்கள்.

சென்ற ஆகஸ்ட் 11ந் திகதி நடைபெற்ற பூரண சூரிய கிரகணம் மிகவும் பிரபல்யம் பெற்றது. ஏனெனில் இந்த Millenniumத்தின் கடைசி சூரிய கிரகணம் ரோமேனியா, துருக்கி போன்ற சுற்றுலா கவர்ச்சி இடங்களின் ஹோட்டல்கள் பல மாதங்களுக்கு முன்னரே முற்பதிவு செய்யப்பட்டு முடிந்து விட்டது. ஜோர்டான் நாடு இந்த நாளை விடுமுறையாக பிரகடனப்படுத்தி இருந்தது.

பூரண சூரியகிரகணம் பார்ப்பதற்கு அரிய ஒரு நிகழ்ச்சியாகும் படிப்படியாக சூரியன் மறைக்கப்படும்போது பறவைகள் தங்கள் இரை தேடலை நிறுத்தி கூடுகளுக்கு திரும்பின. பகல் நேரத்தில்தான் மலரும் மலர்கள் மூடிக் கொள்ளும். தேனீக்கள் திசையறியாது பறப்பதை நிறுத்தி விடும். வெப்பநிலையும் இரவுபோல் குளிர்ந்து விடும். இரண்டு மூன்று நிமிடங்களில் மீண்டும் சந்திரன் நேர்கோட்டிலிருந்து விலகிச் செல்ல சூரியன் உதிக்கும் வேளை போன்று ஒளி படிப்படியாகக் கூடும். இதன் போது விடியற் காலை வேளை போல் பறவைகள் கூட்டை விட்டு வெளியேறி இரை தேடச் செல்லும். பூக்களும் மலரும். இந்த அரிய காட்சிகளை அடுத்த முறையாவது தவறாமல் பார்க்க வேண்டும்.

வட அமெரிக்காவில் தெரியும் அடுத்த பூரண சந்திர கிரகணம் 2000ம் ஆண்டு ஜனவரி 21 ந் திகதி உண்டாகும். இதே ஆண்டு டிசம்பர் 25ம் திகதி ஒரு பகுதி (Partial) சூரிய கிரகணம் ஏற்படும். 2017 ம் ஆண்டு August 21ம் திகதி அமெரிக்காவின் Oregan, Charleston, South Carolina போன்ற இடங்களில் பூரண சூரிய கிரகணம் தெரியும். 7 ஆண்டுகளின் பின்னர் 2024ம் ஆண்டு ஏப்ரல் 8ந் திகதி மொன்றியோல், Buffalo ஆகிய இடங்களில் பூரண சூரிய கிரகணம் மீண்டும் தோன்றும்.

எனவே இதனைக் காண்பதற்கு அரிய இந்தப் பகலில் ஒரு இரவு நிகழ்ச்சியை பார்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

*******************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.

10 வருடங்களாக தமிழர் மத்தியில்

யோகாஸ்

☎ :(416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 99

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| | ■ | 4 | | ■ | | | 5 |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| | 6 | ■ | | | 7 | | 8 |
| ■ | ■ | | | 9 | 10 | ■ | |
| | ■ | ■ | | ■ | 11 | | |
| 12 | | | 13 | | | ■ | ■ |

**இடமிருந்து - வலம்**

1. அந்தணன்
4. பாரம்
5. பயிரிடப்படாத நிலம் (வல-இட)
6. ஒலி (வல - இட)
8. பழமையானது (வல-இட)
10. போர் வீரர் அணிவது (வல-இட)
1. இதன் எதிர் சொல் இடம்
12. பெருவிரல்

**மேலிருந்து கீழ்**

1. காலணி
2. தொன்மை
3. அரசியின் வதிவிடம்
4. உருசி
7. செய்தி
9. காடு (கீழ் - மேல்)
12. விழி (கீழ்-மேல்)
13. வெறுப்பு

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் SEPTEMBER 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒ | ட் | ட | க | ம் | ■ | லா | உ |
| த் | ■ | ■ | ■ | ■ | ஈ | ■ | தா |
| து | றை | மு | க | ம் | ■ | தை | சீ |
| க் | ■ | ■ | ம் | ■ | க | ■ | ன |
| கொ | ள் | ள | ம | ■ | லி | ■ | ம் |
| ள் | ■ | ■ | ல் | ■ | யு | ■ | ■ |
| ■ | ■ | ற | ■ | ■ | க | ஞ் | சி |
| அ | ந் | தி | வா | ன | ம் | ■ | கை |

**#97இல் வெற்றி பெற்றோர்**

1) MRS.B.K.THURAIRAJAH DONMILLS
2) NIVETHA CHANRKUMAR, NORTH YORK

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்

YOGAS
615 KENNEDY RD.
Scarborough, Ont.

DMR

துரித பணமாற்று சேவை

இலங்கை — இந்தியா
சிங்கப்பூர் — ஐரோப்பிய நாடுகள்

ஆகியவற்றிற்கும் பணம் அனுப்ப அல்லது அங்கிருந்து எடுத்து வர உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: (416) 264-8019
262 Markham Road , Scarborough, Ont.
( மேல் மாடி / 2nd floor)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா
## கலையரசி - 99


எமது வருடாந்த கலைவிழா 'கலையரசி-99' அக்டோபர் மாதம் இறுதியில் நடைபெற உள்ளது என்பதை தெரியப்படுத்துகிறோம். எமது புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| கப்டன் எஸ் சந்தியாபிள்ளை | பொ. குகதாசன் | என். கேசவன் |

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing

ONTARIO'S DRIVE CLEAN




**Repairs**
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)

☎ (416) **285-4998**

---

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

---

## விரைவில் வாகனம் வாங்கவோ அல்லது குத்தகைக்கு எடுக்கவோ உள்ளீர்களா?



பலரும் புதிய வாகனங்களை வாங்கிக் கொண்டும் குத்தகைக்கு எடுத்துக் கொண்டும் இருக்கும் நேரம் இது. இந்த நேரத்தில் ஒரு விடயத்தை உங்களுக்கு கூற விரும்புகிறேன். இந்த நேரத்தில் உங்களால் 1999ம் ஆண்டு மொடல் வாகனங்களையும் 2000ம் ஆண்டு வாகனங்களையும் பெறக் கூடியதாக இருக்கும். இந்த நேரத்தில் எந்த ஆண்டு வாகனத்தை நீங்கள் வாங்கப்போகிறீர்கள் என்பது ஒரு பெரிய விடயமாகும்.

நீங்கள் வாகனத்தை குத்தகைக்கு எடுக்க இருந்தால் 2000 ஆண்டு வாகனத்தை எடுப்பது புத்திசாலித்தனமான விடயமாகும். அதற்க்கு பல காரணங்கள் உள்ளன. அதேவேளை நீங்கள் வாகனத்தை வாங்க இருந்தால் அந்த வாகனத்தை 1999 ஆக எடுப்பதன் மூலம் பல வழிகளில் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு- ***சோதீஸ்*** *Cell (416) 704 -1179*

---

*We are entering 5 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

## N.T.E *Auto* Inc.

New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஒட்டோ இங்.**

NTE **AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN




---



## AJI AUTO WORKS

❋ Mechanical ❋ Auto Electrical Repairs
❋Specialized Brakes ❋Major & Minor Repairs on Import and Domestic Cars
❋ **saftly Inspection Certification**
**VEHICLE EMISSIONS INSPECTION**

ONTARIO'S DRIVE CLEAN

**T. Sabanthan**
**T. Sivapatham**
**Tel: 752-2642**
151 Nantucket Blvd, Unit 5, Scarborough, Ont. M1P 4R5

---



## கிராமத்து விருந்து

**RESTAURANT, CATERING, TAKE OUT** *L.L.B.O.*

603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

கனடாவில் முதன் முதல் தலைவாழையில் விருந்து படைத்தவர்கள்

2 மட்டன் அல்லது Beef றோள்ஸ்
2 மட்டன் அல்லது மீன் பற்றீஸ்
2 மீன் கட்லட்
2 வடை

**99 சதம்**

கொத்துரொட்டி - ஆடு, மாடு, கோழி, மரக்கறி
அப்பம் - பால், முட்டை, பிளேன்

**$3.99**

கேட்டரிங் ஓடர்களுக்கு அழையுங்கள் - (416) 266-4240

Easy Weight Lost Programme *Latha: 416-421-2164*

# ஆரோக்கிய வாழ்வு (40)



- *N.* செல்வசோதி


## பெண்கள் என்றும் இளமை பெற

கடந்த நான்கு இதழ்களிலும் கூறப்பட்டவை எல்லாம் நிறைந்த நிலைமையே இளமை பார்க்க முகம் நன்றாக இருந்தால் மட்டுமோ, தலை நரைக்காமல் இருந்தாலோ, தோல் சுருக்கம் விழாமல் இருந்தாலோ இளமை என்று கூறிவிடமுடியாது.

தோல் சுருக்கமின்றி பால்வடியும் முகத்தோடு படுத்த பகுக்கையில் இருந்தால் இளமையாகுமா? ஆகவே இளமை என்பது உடலும் மனமும் நலமுடனிருப்பதே. இதற்கு என்ன வழி என்பதை சற்று நோக்குவோம்.

### கவர்ச்சியான தோற்றம் இருக்க

சில பெண்களுக்கு திருமணமாகி இரு குழந்தைகள் பெற்றுப் பல வருடங்களின் பின்பு முகம் குழந்தைப் பொலிவுடன் காணப்படும். இதற்கு அவர்களின் உணவில் மாவு சத்து நிறைந்து இருப்பதே காரணம். இவ்வாறு




முகம் குழந்தைப் பொலிவுடன் காணப்படுபவர்களுக்கு உடல் பெருத்து குண்டாகக் காட்சியளிக்கும். இதை சரி செய்ய நாள்தோறும் சிறுசிறு நடைப்பயிற்சி போதும். இத்துடன் மதியம் தூங்குவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ஒல்லியான உடலமைப்பையுடைய பெண் மணிகள் பூசனிக்காய், அரிசிச் சோறு காய்கறிகள் பழச்சாறுகள் போன்றவற்றை உட்கொண்டு வந்தால் கவர்ச்சியான தோற்றம் உண்டாகும். நீர்ச்சத்து இளமைத் தோற்றத்தையும், கரெட், தக்காளி, வெங்காயம், முட்டைக்கோஸ், சலட் வகைகள் என்பன உடல் பொலிவையும் தரும். எலுமிச்சம் பழம் பிழிந்து தேன்விட்டு இதமான சூடுள்ள வெந்நீர் கலந்து காலையில் அருந்தி வந்தால் இரத்தம் சுத்தமாகி தோற்றம் அழகுபெறும்.

குளிர்ச்சி தரும் காய்கறிகள், தயிர், நெய், கீரைவகைகள் சேர்த்து தினம் உண்ணும் பெண்களில் இளமை ஊஞ்சலாடுவது நிச்சயம்

### அளவான தோற்றம் பெற

தோற்றம் பருத்துவிடக்கூடாது. இதற்காக இலேசான ஆசனம் பயிற்சிகள் செய்துவரவேண்டும். சோபா போன்றவற்றில் உட்கார்ந்து அதிக நேரம் TV பார்ப்பதை நிறுத்த வேண்டும். இதனால் பின்பு கண்ணாடி அணிய வேண்டியதோடு தோள்பட்டைகள் பெரிதாகிவிடும். பின் இது முதுமை நிலைக்குத்தான் தள்ளும். அளவான கழுத்து, கைகள், கால்கள் அமைய சில யோகாசனம் பயிற்சிகள் உள்ளது.

பருமனைக் குறைக்க பால், ஐஸ்கிறீம் போன்றவற்றை குறைத்து உண்பதுடன் விரதங்கள், நோன்புகளின்போது பட்டினி இருப்பதுடன் பழவகைகள் உண்டு வந்தால் போதுமானது.

சர்வாங்காசனம், பச்சிர ஆசனம் என்பன தொடைகளின் பின்புறத்திலுள்ள தசைகளைக் குறைத்து அழகைத் தரும். இவ்வாசனம், நாளமில்லா சுரப்பிகளைத் தூண்டி கோமோன் சரி வரச்சுரக்கச்செய்து இளமையோடு இருக்க உதவும்.

சாந்தி ஆசனத்தில் (சவாசனம்) அரைமணி நேரமாவது இருப்பதால் உடல் அமைதிபெற்று உயர் இரத்த அழுத்தம் High Blood Pressure குறைந்து முகத்தில் ஒளி பிறக்கும் அத்துடன் கண்களை மூடி தினமும் சில நிமிடமாவது தியானப்பயிற்சி செய்வதால் சிந்தனை கொதிப்படையாது உள்மனம் சரியாக தனது வேலைகளைச் செய்யும். இதனால் உண்டாகும் நிதானம், உள்ளத்தில் சமநிலையைப் பாதுகாக்கும். மேற்குறிப்பிட்டவைகள் எல்லாம் இளமையை என்றும் ஊஞ்சலாடச் செய்யும்.

20 வயதில் இளமை அழகைத்தரும். 60 வயதில் ஒழுக்கமே அழகாக, இளமையோடு இருக்கத் தரும். இத்துடன் மசாச் செய்வதும், உடலுகக்கேற்ற அவரவர் நிறத்திற்கேற்ற உடைகள் அணிவதும் அழகைத் தரும். ***- நன்றி யோகக்கலை***

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

**Neelam SILK**

**வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை**

# நீலம் சில்க்

**அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்**



- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அமூர்வா சேலைகள்

கோலம், ரங்கோலி, அமூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484

# வாணிப வசந்தம் '99

கனடா இலங்கை தமிழர் வர்த்தக சம்மேளனம் வழங்கிய 8வது வர்த்தக கண்காட்சியான வாணிப வசந்தம் '99, அமோக ஆதரவுடன் பெரும் வெற்றியை அடைந்தது குறித்து மிக்க மகிழ்ச்சியை அடைகின்றோம்.

தங்கள் ஸ்தாபனம், விளம்பரங்கள் மூலமும், செய்திகள் மூலமும் கொடுத்த ஆதரவும் ஒத்துழைப்பாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்திருக்கின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. அதற்காக எங்கள் நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

நூற்றுக்கு மேல் காட்சிச் சாலைகளும், மக்களை மகிழ்விக்க கலை நிகழ்ச்சிகளும் இரு நாட்களிலும் நடைபெற்றன. ஒன்டாரியோ மாகாண வர்த்தக சம்மேளனத் தலைவராகிய திரு. டக்ளஸ் ரோப்சன் பிரதம விருந்தினராக கலந்து குத்து விளக்கேற்றி சிறப்பித்தார். 15,000 இற்கு மேலான பார்வையாளர்கள் இந்த இரு நாட்களிலும் பங்கு பற்றினார்கள். இதில் பல குடும்பத்தினர் தங்கள் குழந்தைகள், சிறுவர்கள், பெற்றோர்களுடன் கலந்து கொண்டார்கள். 12வயதிற்குட்பட்டோரை, இலவசமாக அனுமதிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'வாணிப வசந்தம் 99' விழாக்குழுத் தலைவர் குலா செல்லத்துரை மிகத் திறம்பட செயலாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு உதவியாக ஞானச்சந்திரன், யசோ சின்னத்துரை. திரு. திருமதி ராஜ் செல்லத்துரை, திரு. திருமதி. லோகன் வேலும்மயிலும், குகதாசன், ஈசானந்தா, Dr. சிவநேசன், சிவராமலிங்கம், சிறீ கிருஷ்ண சாமி இராமச்சந்திரன், புஸ்பா சிவராஜா மேலும் நிர்வாக சபையில் இல்லாத பல தொண்டர்கள் இந்த இரு நாட்களிலும் கடமையாற்றினார்கள். இப்படியான தொண்டர்களுக்கு சம்மேளனம் தங்களது வருடாந்த ஆண்டுக்கூட்டத்தில் கௌரவிப்பது வழக்கம். இம்முறையும் இவர்களுக்கு பாராட்டி கௌரவிக்கப்படுவார்கள்.

பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தமிழர் ஐக்கிய அமைப்பு மிகவும் அவதானத்துடனும் திறமையாகவும் செய்தார்கள். இவர்களுக்கு எமது நன்றியை தெரிவிப்பதுடன், வர்த்தக சம்மேளனம் செப்டம்பர் மாத ஆண்டுக் கூட்டத்தில் கௌரவிக்கப்படுவார்கள்.

முக்கியமாக இம்முறை மக்ஸ் டுவர்ஸ், வாகனம் இல்லாதவர்களுக்கு சொகுசு பயண பஸ் சேவையை இலவசமாக வழங்கினார்கள். சனிக்கிழமை 1 பஸ் சேவையை பொதுமக்களுக்கு அளித்தும், பின் ஞாயிற்றுக் கிழமை திரளான மக்களுக்காக பஸ்களை சேவைக்கு விட்டார்கள்.

விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், இதில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு தந்த வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், மற்றும் மக்களுக்கு பயனளிக்கும் முறையில் வழிகாட்டிய ஸ்தாபனங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொளகிறோம்.


அத்துடன் வர்த்தக சம்மேளனத்தில் மேலும் பலர் அங்கத்தவர்களாகச் சேர்ந்து வர்த்தக சம்மேளனத்தின் பல பணிகளிலும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புறின்றோம்.

அடுத்த வாணிப வசந்தத்திற்கும் இதுபோல் வெற்றி கிடைக்க ஆசி கோரிக்கின்றோம்.

-நன்றி

# முத்துக்குறள் மூன்று


ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்

குறள் என்பது மிகக் குறுகியது. உலகிலே மிகப்பெரிய கருத்துக்களை மிகச் சுருக்கமா கூறிவிளங்க வைப்பது திருக்குறள் ஒன்றே. இந்தக் கருத்துக்களை யாருமே மறுக்க முடியாது. வள்ளுவன் கூறிய அற வழியிலே நம் வாழ்க்கைப் பயணம் செல்லுமென்றால் யாருக்கும் எந்தவிதமான துன்பமுமில்லாது வாழலாம் என்பது உறுதி

மேலும் **"நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்."**

இ[illegible]றளின் ஆழமான கருத்தைப் பாருங்கள் நோய் என்று வள்ளுவர் இங்கு வ[illegible]ப்பது துன்பத்தையும், நாம் செய்யும் கொடிய பாவங்களையுமே அன்றி நமக்கு வரும் காய்சல், வயிற்றுவலி, தலைவலி , ஜலதோசம் போன்ற நோய்களையல்ல. ஆகவே தெளிவாக விளங்கவேண்டியது நமக்கு வரும் ஒவ்வொரு துன்பத்திற்கு காரணம் நாமே. தீங்கு செய்தவருக்கே தீங்குகள் வந்து சேரும். தீங்கற்ற வாழ்வை விரும்புகிறவர்கள், பிறருக்குத் தீங்கிழைத்தல் கூடாது.

தமிழ் மொழி; தொன்மையால், மென்மையால், இனிமையால், பக்தியால், கருத்தால், அறிவால், பல்கலைகளால் ஆழ்ந்து பொதிந்து தெய்வங்களாலும், சங்கப புலவர்களாலும் வளர்த்த பெருமைக்குரியது. பொன்குடத்திற்கு பொட்டு வைப்பதுபோல் தமிழ் தழைக்க அவதரித்த தமிழ் ஞானிகளுள் முதன்மையானவர் திருவள்ளுவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. உண்மையிலே உலகின் மிகத்தொன்மையான பலபெருமைகளைக் கொண்ட தமிழ் மொழியைப்பேசும். மனிதனாக பிறந்ததையிட்டும், ஆதிஅந்தமற்ற அநாதியான சைவசமயத்தில பிறந்ததையிட்டு நான் மிகவும் பெருமையடைவதுண்டு. கடந்த ஒருசில நூற்றாண்டுகளாக சிங்கத்தின் கால்கள் பங்கப்பட்டது போல், மோகனரோஜாவிலே சில முள் இருப்பதுபோல், வானமே எல்லையாகக் கொண்டு தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லை என்று அகில உலகிலும் செங்கோலிச்சிய நம் தமிழ் மொழிக்கு இன்று சில தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளால் பின்தங்கிவிட்டது. இருப்பினும் இன்று உலகிலே நம் தமிழ் மக்கள் இல்லாத நாடுகளே இல்லை. ஆனால் இன்று அந்நியமொழிகளின ஆதிக்கத்தால் தமிழ்மொழியின் வளர்ச்சி சிறிது குன்றியுள்ளது மிகவும் வேதனைக்குரியது. அதற்காக மண்ணிற்குள் புதைந்திருக்கும் தங்கத்தை யாரும் இரும்பு என்று சொல்வதில்லை. இன்றும் வேற்றுமொழி ஆய்வாளர்கள் நமது மொழியிலே உள்ள அரிய நூல்களை தேடிக் கற்று தமிழினை ஆராய்சி செய்து வருகின்றனர். அத்தோடு அதன் பழமையையும், தனித்துவத்தையும் கண்டு வியக்கின்றனர். ஆகவே "பிச்சை புகினும் கற்பன கல்" என்பது போல் நான் உங்களுக்கு விடுக்கும் அன்பான கட்டளை என்னவென்றால் இயன்றளவு உலகிலே வாழும் அத்தனை தமிழர்களும் தம்தாய்மொழியை மறவாது கற்று தம் சந்ததிக்கு [illegible]த கற்பித்து அதன் பெருமையை உணர்த்தி தமிழைப் பேணிப் பாதுகாப்பதை தலைதலையாய கடமையாகக் கொள்ளவேண்டும்.

உண்மையிலேயே எனக்கு இன்னொரு பிறவி இருக்குமென்றால் இறைவனைக் கேட்கும் ஒரே வரம் சைவனாகவும், தமிழனாகவும் பிறக்க வேண்டும் என்பதே. காரணம் தமிழிலே உள்ள விலைமதிக்க முடியாத அறிவுக்களஞ்சியங்களை மீண்டும் மீண்டும் நான் கற்று மகிழ வேண்டுகிறேன். எங்கே மனிதன் எப்படி வாழ்ந்தாலும் சிறந்த அறிவுள்ளவனாக வாழவேண்டும் என்பதையே திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**"செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம் அச்செல்வஞ்**
**செல்வத்துள் ளெல்லாந் தலை"** என்று மிகத் தெளிவாக அறிவுறுத்துகிறார். அதாவது கல்வி எவ்வளவு முக்கியமானதென்று பாருங்கள். கல்வி, அறிவு, ஞானம், பண்பு, அன்பு ஒழுக்கம், இதுபோன்ற சிறந்த குணஇயல்போடு வாழ்ந்தால் உலகிலே யாராவது துன்பப்படுவார்களா. உலகம் அமைதிப் பூங்காவாக மாறாதா.

**"அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணு முள."** இதிலும் கொடிய உள்ளம் கொண்ட மனிதனும் கூட பேராசைப்பட்டு பொருளைத் தேடிக் குவித்திருக்கலாம். ஆனாலும் எந்தப்பிறவிக்கும் நோயற்ற சுகவாழ்வைத்தைத் தரும் நிம்மதியைத் தரும் அருட்செல்வத்திற்கு ஈடாகாது என்று கூறுகிறார். ஆனால் மனிதனோ இவற்றையெல்லாம் படிக்கிறான், உணர்கிறான், நம்புகிறான் ஆனால் அதை நடைமுறைப்படுத்த தவறுகிறான். ஏன் அப்படித் தவறுகிறான்?

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"** நன்கு ஐயம் திரிபுற எல்லாவற்றையும் கற்றபின் அதன் படி ஒழுகாவிட்டால் அக்கல்வியால் என்ன பயன். நேரத்தையும், பணத்தையும் வீணாக்கியதே மிச்சம். நாட்டுக்கும், வீட்டுக்கும் நஷ்டம்.

**"[illegible]வை தீய பயத்தலால் தீயவை**
**த[illegible]ும் அஞ்சப் படும்"** இதிலிருந்து தீமையைப் பற்றி உணர்ந்து கொள்ளுங்கள். தீயை விடக்கொடியது தீய பழக்கங்கள். ஒரு தீப்பொறி வளர்வதால் உலகமே எரிந்து சாம்பலாகிவிடும். அத்தீப்பொறி பெருநெருப்பாக வளர்ந்து உலகத்தையே சாம்பலாக்கி விடுகிறதோ அதேபோல் ஒருமனிதனிடம் தீயபழக்கங்கள் ஏற்பட்டால் அவனையே அழித்து சாம்பலாக்கிவிடும். இன்றைய உலகிலே சராசரி மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள், வாழ ஆசைப்படுகிறார்கள். மற்றவர்கள் துன்பத்தில் இன்பம் காண துடிக்கிறார்கள். தாங்கள் செய்வது சரியா பிழையா என்பதை சிந்திக்காது குறுக்கு வழியில் உழைப்பதையே சிந்தித்துக் கொண்டு இன்ப இலக்கையே நோக்கிச் செல்கிறது அவர்கள் பயணம். தாம் செய்வது சரியா, பிழையா என்பதை சிறிதும் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். தம்முதுகு தமக்குத் தெரிவதில்லை. பிறர்முதுகு தமக்கு நன்றாகத் தெரிகிறது. ஒருவனைக் குற்றவாளி என்று நம் ஆட்காட்டி விரலால் சுட்டிக்காட்டும் போது மற்ற நான்கு விரலும் உங்களைச் சுட்டிக்காட்டுவதை மறந்து விடுகிறீர்களே. யார்தான் உத்தமர் இவ்வுலகிலே? பிழை செய்யாமல் இவ்வுலகிலே வாழ்வது மிதக் கஸ்டம். அது சோதனை, வேதனை மிகுந்தது. அந்தப் போராட்டத்தில் வெற்றி காண்பது தான் சாதனை. அப்படி கண்ணியமான நன்னெறியைக் கடைப்பிடிக்கும் உத்தமர்கள் இல்லாமலில்லை. அவர்கள் இலைமறை காயாக, நீறுபூத்த நெருப்பாக இருக்கத்தான் செய்கிறார்கள். இதைக் குறள் எப்படி வர்ணிக்கிறது **"வானுயர் தோற்றம் எவன் செய்யுந் தன்நெஞ்சத்**
**தானறி குற்றப் படின்"** இக்குறளிலிருந்து தெரிவது எவ்வளவு உயர்ந்தவனாக வாழ்ந்தென்ன, நடித்தென்ன உன்நெஞ்சமே உன்னைக் குற்றவாளி என்று சொன்னால் அதன் பின்பும் ஒரு வாழ்வு தேவையா?

(தொடரும்)



6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்

## அப்சராஸ்



RESTAURANT & CATERING

* கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 (TAKE-OUT ONLY)
* வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
* "மண்வாசனை" வாழை இலைச் சாப்பாடு
* எல்லாவகையான வைபவங்களிற்கும்



அழையுங்கள் (416) 412-6164
2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy/Finch)



## AIRPORT SERVICE & MOVING VAN

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) 759-0557





## நான் ஒரு வழக்கறிஞர் இல்லை


குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

பின் இவரை அழையுங்கள்...

எஸ்.கே. தீசன்
(416) 631-6322



## விளம்பர வினாடி வினா

இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்

இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)

குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -

1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு

1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்

இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.

# விளையாட்டுத் தகவல்கள் (37)

-எஸ். கணேஷ்

## இளம் இலங்கை கிரிகெட் அணியின் எதிர்காலம் பிரகாசிக்குமா?



கடந்த சில மாதங்களாக இலங்கை கிரிகெட் அணியில் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை கிரிகெட் அணியில் Chairman ஆக சிதத் வெத்தமுனி நியமிக்கப்பட்டுள்ளார். 1996ம் ஆண்டு இலங்கை World Champion ஆக வந்த போது Coach ஆக கடமையாற்றி அவுஸ்திரேலிய நாட்டவரான டேவ் வெற்மோர் அவர்கள் மீண்டும் Coach ஆக நியமிக்கப்பட்டுள்ளார். இதை அடுத்து வயது போன பழைய வீரர்களை விடுத்து இளம் வீரர்கள் பலர் புதிதாக அணியில் சேர்த்து கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் இலங்கை அணி ஓவர் ஆடங்களுக்கு பிறம்பாகவும். Test ஆட்டங்களுக்கு பிறம்பாகவும் புதிதாக இரு அணிகள் அமைக்கப்பட்டுள்ளன. அணியின் தலைவர் ரணதுங்கா. உபதலைவர் அரவிந்த டி சில்வா ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டு புதிதாக இலங்கை அணியின் தலைவர் ஆக சனத் ஜெயசூரியாவும் உபதலைவர் ஆக மேகலா ஜெயவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அரவிந்தவும் ரணதுங்கவும் Test ஆட்டங்களில் மட்டுமே இலங்கை அணியில் சேர்த்து கொள்ளப்பட்டுள்ளனர். மொத்தமாக 7 வீரர்கள் பழைய அணியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளனர். ரணதுங்கா. அரவிந்தா. ரோசான் மகாநாம. கசான் திலகரத்தினா. ஏரிக் உபசாந்தா. சந்திகா கெந்துறுசிங்க. ருவன் கல்பேச் ஆகியோர் ஆவார்கள். புதிதாக ரசல் ஆனோல்ட் அவிசா குணவர்த்தன. இந்திக் டீ சேரம். சமாரா சில்வா. சுரேஷ் பெரேரா. நுவன் சோசா ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் இலங்கை அணியின் இளம் வீரர்கள் அடங்கிய "A" பிரிவு இங்கிலாநது நாட்டுக்கு விஜயம் செய்திருந்தது. அதில் இலங்கை அணியின் A பிரிவு வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடினார்கள். இதன் பிறகு பல இளம் வீரர்களை அணியில் சேர்ந்து கொள்வது என திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் சிதத் வெத்தமுனியின் பேட்டியில் இலங்கை அணி முற்றாக மறுசீரமைக்கப்பட்டு புதிய இளம் வீரர்களை நன்கு பழக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டு South Africa வில் நடைபெற இருக்கும் அடுத்த World Cup ஐ கைப்பற்றுவதுதான் தமது பிரதான நோக்கம் என தெரிவித்துள்ளார். இவற்றை எல்லாம் நோக்கும் போது இலங்கை அணியின் எதிர்காலம் மீண்டும் பிரகாசிக்கும் என எண்ணத் தோன்றுகின்றது. இதற்கு மேலும் சிகரம் வைத்தாற் போல் August 25ம் திகதி இவ் இளம் இலங்கை அணி இந்திய அணியை படுதோல்வி அடையச் செய்துள்ளது.

### புதிதாக அமைக்கப்பட்ட ஓவர் ஆட்டங்கள் மட்டும் ஆடும் அணி -(One -Day Matches)

சனத் ஜெயசூரியா (கப்டன்), மேகலா ஜெயவர்த்தனா (உதவி கப்டன்), அவிசாகா குணவர்த்தனா, றசல் ஆனோல்ட், இன்நதிகா டி சேரம், சமாரா சில்வா, உபால் சந்தானா, றமேஸ் பெரேரா, முத்தையா முரளீதரன், சுரேஸ் பெரேரா, சமந்தாவாஸ், ரொமஷ் கலுவுதிரன, றுவன் சோசா, பிரேமோடயா விக்கிரம சிங்க.

### புதிதாக அமைக்கப்பட்ட Test ஆட்டங்கள் மட்டும் ஆடும் அணி

சனத் ஜெயசூரியா (கப்டன்) மேகலா ஜெயவர்த்தனா (உதவி கப்டன்), மேவின் அத்தபத்து, அரவிந்த டி. சில்வா, றசல் ஆனோல்ட், அர்ச்சுனா ரணதுங்கா, ருவன் டில்சன், ரங்கனா ஹேரத், றமேஷ் பெரேரா, முத்தையா முரளீதரன், சுரேஸ் பெரோரா, சமந்தாவாஸ் ரோமேஷ் கலுவுத்திரன, றுவன் சோசா, இந்திகா கபேச், பிரசன்னா ஜெயவர்த்தனா.

### AIWA Cup

August 22ம் திகதி தொடங்கி Aug. 31ம் திகதி வரை அவுஸ்திரேலியா, இந்தியா, ஸ்ரீலங்கா ஆகிய மூன்று நாடுகளும் AIWA Cup சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன. இப்போட்டிகள் யாவும் இலங்கையில் நடைபெறுகின்றன.

### 1. அவுஸ்திரேலியா Vs ஸ்ரீலங்கா August 22, 99

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட் நஷ்டத்திற்கு 206 ஓட்டங்கள் (50 ஓவர்கள்) இதில் Waug 26, Pointing 37, Bevan 44 ஓட்டங்கள் எடுத்தனர். இதில் ஜெயசூரிய 28 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதில் இலகுவாக வெற்றிபெற கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தும் இலங்கை அணி 37.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்கள் எடுத்தது. இதில் டி சேரம் 24, கலுவுத்திரன 33, சந்தானா 30, சுரேஸ் பெரேரா 26 ஓட்டங்கள் எடுத்தனர். அவுஸ்திரேலிய அணி 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

### 2. அவுஸ்திரேலியா Vs இந்தியா August 23, 99

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 38 ஓவர்களில் 7 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மழைகாரணமாக 38 ஓவர்களுடன் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதில் ரொபின் சிங் 38, யடேயா 30, கங்குலி 10, தண்டுல்கார் 14 ஓட்டங்கள் எடுத்தனர். அடுத்து ஆடிய அவுஸ்திரேலிய அணி மிகவும் இலகுவாக 29.1 ஓவர்களில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 159 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் Gilchrist 68, Symonds 68 ஓட்டங்களைப் பெற்றார். இதில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டியது.

### 3. இந்தியா Vs ஸ்ரீலங்கா Ausust 25, 99

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 205 ஓட்டங்களை எடுத்தது தெண்டுல்கார் 37, யடேயா 49, திராவிட் 22, ஓட்டங்களை பெற்றனர். சந்தான சிறப்பாக பந்துவீசி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதில் சிறப்பாக கலுவுத்திரனவின் விக்கெட் Keepingமும் முரளிதரனின் சிறப்பான Fieldingமே இந்திய அணியை 205 ஓட்டங்களில் மழுங்கச் செய்தன. அடுத்து ஆடிய இலங்கை அணி 46.4 ஓவர்களில் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 26 ஆட்டங்களை பெற்றது. இதில் அத்தபத்து 71, ஜெயசூரியா 61, மேகலா ஜெயவர்த்தனா 27, டி சேரம் 24 ஓட்டங்களை பெற்று இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டியது. இவ்வெற்றி இளம் வீரர்கள் அடங்கிய இலங்கை அணிக்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றி என்றே கூறலாம்.

### 4. அவுஸ்திரேலியா Vs ஸ்ரீலங்கா August 26, 99

முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலியா அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டங்களை பெற்றது. இதில் Mark Waugah 84, Gilchrist 38 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் முரளீதரனும், சந்தானாவும் சிறப்பாக பந்துவீசி தலா 3 விக்கெட்டுகளை கைப்பெற்றினர். அடுத்து துடுப்பாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் 4 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களை பெற்ற நிலையில் இருந்து ஆரம்ப ஆட்டக்காரர்கள் சறுக்கிய நிலையில் புதிய இளம் ஆட்டக்காரர்கள் சிறப்பாக ஆடினார்கள். வெற்றியின் விளிம்புக்கு வந்த இலங்கை அணி துர் அதிஷ்டவசமாக தோல்வியை கண்டது. 47.1 ஒவர்களால் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்கள் எடுத்து இதில் றசல் ஆனோல்ட் 41, சமார சில்வா 54, சந்தான 34, வாஸ் 23 ஓட்டங்கள் எடுத்தனர். இதில் அவுஸ்திரேலிய அணி 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

### 5. அவுஸ்திரேலியா Vs இந்தியா (August 28, 99)

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 252 ஓட்டங்களை எடுத்தது. இதில் Gilchrist 77, Symonds 45, Pointing 32, ஓட்டங்களை எடுத்தனர். இந்தியா சார்பாக ஸ்ரீநாத், பிரசாத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். அடுத்து களம் இறங்கிய இந்திய அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் ரமேஷ் சடகோபன் 71, றொபின்சிங் 75, ஓட்டங்களையும் பெற்றனர். இதில் அவுஸ்திரேலியா 41 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.


YARLCAN
STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709


### 6. இலங்கை Vs இந்தியா (August 29, 99)

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 296 ஓட்டங்களை பெற்றது. இதில் தெண்டுல்கார் 120, கங்குலி 85, ரமேஷ் 32 ஓட்டங்களையும் பெற்றனர். இதை அடுத்து துடுபபெடுத்தாடி வந்த இலங்கை அணி மிகவும் திறமையாக ஆடியது. ஒரு நிலையில் 16 ஓவர்களில் ஒரு விக்கெட்டும் இழப்பில்லாமல் 104 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ஜெயசூரியாவும் அத்தபத்தும் சிறப்பாக ஆடினார்கள். ஜெயசூரிய 1sixம் 8 பவுண்றியும் அடித்து 71 ஓட்டங்களையும், அத்துபத்து 55, மேலா ஜெயவர்த்தனா 62 ஓட்டங்களையும் பெற்றனர். இவ்வாட்டத்தில் Revise method எனப்படும் சட்டத்தைப் பாவித்து இலங்கை அணி 42 ஓவர்களில் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அச் சமயம் 42 ஓவர்களில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 247 ஓட்டங்களை பெற்றிருந்தது. ஆகவே இந்திய 23 ஓட்டங்களால் D/L method சட்டத்திற்கேற்ப வெற்றி ஈட்டியது. ஆனால் இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியாவும் இலங்கை அணியுமே தெரிவாகி உள்ளன. ஏனெனில் கடந்த World Cup இல் Net Runrate பார்த்தபடியில் பல நாடுகள் தமது அதிருப்தியை வெளியிட்டன. ஆகவே ICC Cricket Board தற்போது Duck Worth / Lewis Method மூலம் Superior net Run Rateயே கணக்கிடப்பட வேண்டும் என அறிவித்துள்ளது.

அதாவது குறைந்த அளவு ஓவர்களில் கூடிய அளவு ஓட்டங்களை எடுக்க வேண்டும். இலங்கை இந்திய ஆட்டத்தில் 222 ஓட்டங்களை இலங்கை 40 ஓவர்களில் பெற வேண்டும். இந்த இலக்கை இலங்கை அணி பெற்றபடியால் இறுதி ஆட்டத்திற்கு இலங்கை அணி தெரிவானது. இந்த DL Method இல் Rule 11.2 இல் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. ஏதாவது ஒரு ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெறவேண்டும். (இலங்கை அணி முதல் ஆட்டத்தில் இந்திய அணியிடம் வெற்றிபெற்றது.) அடுத்து Net Run Rate அல்லாமல் Superior Run Rate யே தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனாலும் Net Run Rate இல் இலங்கை அணி -0.115, இந்திய அணி -0.578 இதிலும் இலங்கை அணியே முன்னணி வகிக்கிறது. Superior Run Rate இல் இலங்கை அணி 96.4 ஓவர்களில் 420 ஓட்டங்கள் இந்திய அணி 100 ஓவர்களில் 416 ஓட்டங்கள் மீண்டும் இரண்டாவது வீதியிலும் இலங்கை அணி முன்னணி வகிக்கின்றமையால் இலங்கை அணி Final ற்கு தெரிவானது.

### 7. அவுஸ்திரேலியா Vs இலங்கை (August 31, 99) (இறுதியாட்டம் -Final)

இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் அவுஸ்திரேலியாவை தோற்கடித்து AIWA Cup Champions பட்டத்தை தட்டி சென்றுள்ளது. இதில் ஆட்ட நாயகனாக கலுவுத்திரன தெரிந்தெடுக்கப்பட்டார். 12 பவுண்றிகள், 117 பந்துகளில் 95 ஓட்டங்களை குவித்தார்.

| Australia innings (50 overs maximum) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| +AC Gilchrist | c Jayawardene | b Wickramasinghe | 21 | 16 | 4 | 0 |
| ME Waugh | | b Muralitharan | 32 | 52 | 4 | 0 |
| RT Ponting | run out (de Saram/Kaluwitharana) | | 18 | 37 | 0 | 0 |
| DS Lehmann | | c & b Chandana | 21 | 34 | 0 | 0 |
| *SR Waugh | | b Muralitharan | 43 | 68 | 3 | 0 |
| MG Bevan | | b Chandana | 0 | 1 | 0 | 0 |
| A Symonds | not out | | 22 | 39 | 0 | 0 |
| SK Warne | c Silva | b Arnold | 21 | 32 | 0 | 0 |
| JN Gillespie | | b Arnold | 14 | 16 | 0 | 1 |
| DW Fleming | st Kaluwitharana | b Jayasuriya | 0 | 4 | 0 | 0 |
| GD McGrath | st Kaluwitharana | b Jayasuriya | 1 | 3 | 0 | 0 |
| Extras | (lb 3, w 3, nb 3) | | 9 | | | |
| Total | (all out, 50 overs) | | 202 | | | |

FoW: 1-37 (Gilchrist, 5.6 ov), 2-74 (ME Waugh, 16.6 ov), 3-75 (Ponting, 17.2 ov), 4-126 (Lehmann, 31.3 ov), 5-126 (Bevan, 31.4 ov), 6-144 (SR Waugh, 36.1 ov), 7-178 (Warne, 44.2 ov), 8-197 (Gillespie, 48.3 ov), 9-198 (Fleming, 49.2 ov), 10-202 (McGrath, 49.6 ov).

| Bowling | O | M | R | W |
|---|---|---|---|---|
| Zoysa | 7 | 0 | 31 | 0 (2nb, 1w) |
| Arnold | 8 | 0 | 42 | 2 (1w) |
| Wickramasinghe | 8 | 0 | 24 | 1 |
| Muralitharan | 10 | 1 | 36 | 2 (1nb) |
| Chandana | 10 | 0 | 33 | 2 |
| Jayasuriya | 7 | 0 | 33 | 2 (1w) |

| Sri Lanka innings (target: 203 runs from 50 overs) | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| MS Atapattu | c Gilchrist | b Fleming | 24 | 46 | 1 | 0 |
| +RS Kaluwitharana | not out | | 95 | 117 | 12 | 0 |
| RP Arnold | | b Gillespie | 47 | 57 | 3 | 0 |
| *ST Jayasuriya | not out | | 20 | 22 | 4 | 0 |
| Extras | (lb 5, w 5, nb 6) | | 16 | | | |
| Total | (2 wickets, 39.2 overs) | | 202 | | | |

To Bat: DPMdeS Jayawardene, SI de Saram, LPC Silva, UDU Chandana, GP Wickramasinghe, M Muralitharan, DNT Zoysa.

FoW: 1-64 (Atapattu, 13.4 ov), 2-174 (Arnold, 33.2 ov).

கடந்த பல ஆட்டங்களில் பலநாடுகளை வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணியை இளம் வீரர்கள் அடங்கிய இலங்கை கிரிகெட் அணியே முதலில் தடுத்து நிறுத்தியுள்ளது. உலகிலேயே கடந்த World Cup இற்கு பின்பு தாங்கள் தான் கிரிகெட் ஜாம்பவான்கள என்ற அவுஸ்திரேலியாவின் தலைக்கனத்தை இலங்கை அணி அடக்கியுள்ளது. இதில குறிப்பாக இலங்கை அணியின் Fielding யே திறமாக குறிப்பிடலாம். இலங்கை அணி எவ்வித அரசியல் கலப்பில்லாமல் இப்படி திறமையான இளம் வீரர்களுக்கு இடமளித்து வருமானால் இலங்கை அணி மீண்டும் World Champion ஆவார்கள் என்பது திண்ணம்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம் & சண்



1964

| | |
|---|---|
| 1. அல்லி | 2. அம்மா எங்கே |
| 3. அருணகிரிநாதர் | 4. ஆயிரம் ரூபாய் |
| 5. ஆண்டவன் கட்டளை | 6. உல்லாசப் பயணம் |
| 7. என் கடமை | 8. கர்ணன் * |
| 9. கலைக்கோயில் | 10. கறுப்புப் பணம் |
| 11. காதலிக்க நேரமில்லை * | 12. கைகொடுத்த தெய்வம் |
| 13. சர்வர் சுந்தரம் | 14. சித்ராங்கி |
| 15. தாயின் மடியில் | 16. தெய்வத்தாய் |
| 17. தெய்வத் திருமகன் | 18. தொழிலாளி |
| 19. நல்வரவு | 20. நவராத்திரி |
| 21. நானும் மனிதன்தான் | 22. பச்சை விளக்கு |
| 23. படகோட்டி * | 24. பணக்கார குடும்பம் |
| 25. பாசமும் நேசமும் | 26. புதிய பறவை * |
| 27. பூம்புகார் | 28. பொம்மை |
| 29. மகளே உன் சமத்து | 30. முரடன் முத்து |
| 31. ரிஷ்யசிங்கர் | 32. வழி பிறந்தது |
| 33. வாழ்க்கை வாழ்வதற்கே | 34. வீராங்கனை |
| 35. வேட்டைக்காரன் | |

1964ம் ஆண்டில் வெளியான திரைப்படங்களைப் பற்றிய தகவல்களை இவ் இதழில் பார்ப்போம்.

தமிழ் சினிமா வரலாற்றில் 1964ம் ஆண்டு மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்து விட்டது. தமிழ் சினிமாவின் அன்றைய முன்னணிக் கதாநாயகர்களில முக்கியமானவர்களாகக் கருதப்படும் நடிகர் திலகம், மக்கள் திலகம், காதல் மன்னன் ஜெமினி கணேசன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்., நவரசநாயகன் முத்துராமன் ஆகியோருடன் நகைச்சுவைக் குணச்சித்திரப் பாத்திரத்தின் மூலம் சாதனை படைத்த நடிகரான நாகேஷ் அவர்கள் முக்கிய பாத்திரமேற்று வெளிவந்த 'சர்வர் சுந்தரம்', கவியரசு கண்ணதாசனின் சொந்தப்படமான 'கறுப்புப் பணம்', வீணை பாலசந்தரின 'பொம்மை' உள்ளிட்ட சுமார் 35 படங்கள் வெளிவந்த ஆண்டு 1964.

அதுமட்டுமல்ல எம்.ஜி.ஆர், சிவாஜி இருவரினதும் படங்கள் இவ்வாண்டு சமமாக வெளிவந்தன.. அதாவது இருவரும் தனித்தனி பங்கேற்று நடித்து வெளிவந்தவை தலா ஏழு படங்களாகும்.. இவற்றுள் கலைஞர் ஏ.பி. நாகராஜன் அவர்களது 'நவராத்திரி' நடிகர் திலகத்தினது 100வது படமாக அமைந்தது இவ்வாண்டில் வரலாறாகிறது.

அத்துடன் சிவாஜி அவர்கள் நடித்த படங்களாக கர்ணன், கைகொடுத்த தெய்வம், ...சை விளக்கு, (சிவாஜி புரடக்ஷன் சொந்தப்படமான) புதிய பறவை, முரடன் முத்து, ...ண்டவன் கட்டளை, , நவராத்திரி ஆகிய படங்கள் வெளிவந்தன.

எம்.ஜி.ஆர் நடித்து வெளிவந்த படங்களாக என் கடமை, தாயின் மடியில், தெய்வத்தாய், தொழிலாளி, படகோட்டி, பணக்காரக் குடும்பம், வேட்டைக்காரன் ஆகிய ஏழு படங்கள் திரையிடப்பட்டன.



'வேட்டைக்காரன்' - சாவித்திரியுடன்

கலையம்சம் நிறைந்த ஸ்ரீதரின் கலைக்கோயில் மற்றும் வெள்ளி விழாக் கண்ட பொழுது போக்குச் சித்திரமான 'காதலிக்க நேரமில்லை' ஆகிய இரு படங்களும் இவ்வாண்டுக்கான படங்களேயாகும்.. ரவிச்சந்திரன், காஞ்சனா ஆகிய இருவரும 'காதலிக்க நேரமில்லை' மூலம தான் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானார்கள். இயக்குநர் திலகம் கே.எஸ். கோபாலகிருஷ்ணனின இயக்கத்தில் வெளிவந்த 'ஆயிரம் ரூபாய்' 'கை கொடுத்த தெய்வம்' கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் கைவண்ணத்தில் தீட்டப்பெற்ற 'பூம்புகார்' என பல வரலாறு படைத்த சித்திரங்கள் இவ்வாண்டிலேயே வெளியாகின.

அனைத்து முன்னணிக் கதாநாயகர்களினது படங்களும் நாகேஸ் நடித்த கே. பாலசந்தர் இயக்கிய ஏ.வி. எம் தயாரிப்பான 'சர்வர் சுந்தரம்' உட்பட அனைத்தும் 100 நாட்களைக் கடந்து வெற்றி நடைபோட்டன. 'காதலிக்க நேரமில்லை' வெள்ளிவிழாக் கண்டது. நடிகர் திலகமும், சாவித்திரியும் இணைந்த கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில் வெளியான 'கை கொடுத்த தெய்வம்'' ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கத்தைத் தட்டிக ...ாண்டதுடன், திருமதி. சாவித்திரி கணேசனுக்கு 'நடிகையர் திலகம்' என்ற ...த்தையும் இரசிகர்களிடமிருந்து பெற்றுக் கொடுத்தது. அத்துடன் ஜனாதிபதியின சான்றிதழ் பெற்றது நாகேஷ் நடித்த 'சர்வர் சுந்தரம்' ஆகும். இவ்வாறு பல வகையாலும் 1964ம் ஆண்டு வெளிவந்த படங்களும் அதனை இயக்கியவர்களும் தமிழ சினிமா வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுப் பாராட்டப் பெற்ற ஆண்டாகிறது.

*(சினிமா தொடரும்)*

## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்



### சுவடு 37

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பெண்கள் அதாவது குடும்பப் பெண்களும் திருமணத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இளம் யுவதிகளும் தமிழ் சினிமாவின் இரண்டு கதாநாயகர்களுள் அதிக மோகம் அல்லது விருப்பம் கொண்டவர்களாகவும் அவர்களைப் பற்றி உயர்வாகப் பேசுபவர்களாகவும் இருந்துள்ளதைக் கடந்த காலத்தில் அவதானித்து வந்திருக்கிறேன்.

அந்த இருவரில் ஒருவர் நமது நடிகர் திலகம் மற்றவர் காதல் மன்னன் ஜெமினி கணேசன். தியாகராஜ பாகவதர், பி.யூ. சின்னப்பா காலத்திற்குப் பின் வந்த கதா-நாயகர்களைப் பற்றிய காலகட்டத்தில் வாழ்ந்த பெண்களைப் பற்றியே இங்கு நான் குறிப்பிடுவதாகும்.

காதல் உணர்வுகளையும் அதன் நிமித்தம் ஏற்படும் சோக நிகழ்வுகளையும் மென்மையாகப் பிரதிபலிக்கும் காதல் மன்னன் ஜெமினி கணேசனிடம் இளம் யுவதிகளும் கரடு முரடான கணவன்மார்களிடம் அகப்பட்டுச் சித்திரைவதைப்படும் குடும்ப ஸ்திரிகளும் , கல்லூரி மாணவிகளும் எவ்வளவு இலயிப்புக் கொண்டிருந்தார்கள் என்பதை அவர்களின் உரையாடல்களிலிருந்து பலமுறை செவிமடுத்துள்ளேன்.

அதே போல் மத்தியதரக் குடும்பங்களிலேற்படும் பல்வேறு உணர்வுகளையும் பிழிந்தெடுத்துத் தனது பாத்திரப் படைப்புக்களினூடாக படம் பார்ப்போரை அவர்கள் வீட்டிலொருவராக நினைத்து உறவு கொள்ள வைத்த நடிப்புச் செல்வர் நமது நடிகர் திலகம் அவர்கள் என்றால் அதில் மிகையில்லை. அப்படி ஆயிரமாயிரம் சகோதரிகளின் தாய்மார்களின் நெஞ்சங்களில் இன்றும் உயிர் வாழும் அண்ணனாக நடிகர் திலகமும் தங்கையாக திருமதி. சாவித்திரி கணேசன் அவர்களும் எடுத்துக் கொண்ட பாத்திரம் அபூர்வமான 'பாசமலர்' படைப்பாகும்.

'பாசமலர்' திரைப்படத்தில் சிவாஜி அவர்கள் 'அம்மாடி' என்று பாசத்துடன் தங்கை சாவித்திரியை அழைப்பதைக் கவனித்தவர்களுக்குப் புரியும் அந்த வார்த்தை உச்சரிப்பில் உள்ள பாசத் துடிப்பு.

கதை வசனகர்த்தா எழுதாமலேயே இவ் வார்த்தையைப் பலமுறை தேவையைப் பொறுத்து உச்சரித்திருப்பார் சிவாஜி என்று தான் நான் நம்புகிறேன். ஏனெனில் வேறு சில திரைப்படங்களிலும் சிவாஜி அவர்கள் 'அம்மாடி' என்று சகோதர வாஞ்சையுடன் அழைப்பதை நான் கவனித்திருக்கிறேன்.பாசமலர்' திரைக் காட்சி ஒன்று மிகவும் அற்புதமானது. அண்ணன் சிவாஜி தங்கைக்குப் பால் கொண்டு வருவார். அதற்குள் தங்கை ராதா (சாவித்திரி) தூங்கிவிடுவார். "அம்மாடி...! ராதா! தூங்கிட்டியா" என்பார். அப்படி" அம்மாடி' என்று அவர் அழைத்த ஒரு வார்த்தையிலேயே தங்கையிடம் அவர் கொண்டிருந்த பாசப்பிணைப்பை மிக அழுத்தமாகப் புரிய வைப்பார். அதன் பின்... வருவதே "மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள்... " என்ற கனவுப் பாடல் காட்சி ஆரம்பமாகும்.

'பாசமலர்' படத்தைப் பற்றியும், அதன் பாத்திரங்கள் பற்றியும், அதில் பங்கேற்று நடித்தவர்கள் பற்றியும் என்னால் பல வாரங்களுக்கு எழுதமுடியும். சிவாஜியின் கதாநாயகிகளுள் அதிஷ்டம் செய்த நாயகிபோன்று திருமதி. சாவித்திரி கணேசன் அம்மையார் இதில் நடித்தது பற்றியே இங்கு குறிப்பிட்டு எழுத முனைந்தேன். எனது பேனாவும் நினைவும் எங்கெல்லாமோ என்னை இழுத்துச் செல்கிறது.

வியாச முனிவர் சொல்லச் சொல்ல விநாயகப் பெருமான் பாரதம் எழுதினாராம். அதுவும் தனது தந்தத்தை உடைத்து அதனையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதினாராம். எனவே விநாயகப் பெருமான் தன்னை வருத்தி ஒரு தர்மசரிதத்தை எழுதி முடித்தார் என்றே கொள்ள வேண்டும். அதேபோல் தான் நமது நடிகர் திலகம் ஏற்றுக் கொண்ட பல பாத்திரங்கள் நேற்றும் இன்றும் நாளையும் பேசப்படுகிறதென்றால் 'அதை வரலாறாக்க சிவாஜி அவர்கள் எத்துணை தூரம் தன்னை வருத்தியிருப்பார் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

அண்மையில் கூட எனது இனிய நண்பர் 'கலைமாமணி டாக்கர் சீர்காழி ஜி. சிவசிதம்பரம் அவர்கள் ரொரன்ரோ வந்திருந்தபோது அவரை வழியனுப்ப விமான நிலையம் சென்றிருந்தேன். விமால நிலையத்தில் கூட இருவரும் சிவாஜி அவர்களைப் பற்றியே உரையாடினோம். தனது தந்தையார் அமரர். சீர்காழி. கோவிந்தராஜன் அவர்கள் சிவாஜியுடன் நெருக்கமாக இருந்த காலங்களை நினைவுபடுத்தினார்.

'ராஜராஜசோழன்' திரைப்படத்தில் ஒரு காட்சியில் சிவாஜியின் கண்கள் சிவந்திருக்க வேண்டுமாம் என்னவெல்லாமோ செய்து பார்த்தார் சிவாஜி; விழிகள் சிவக்கவில்லையாம். உடனே ஒரு உதவியாளரைக் கூப்பிட்டு ஒரு துவாயை வாங்கினாராம். அத்துவாயின் விளிம்புகள் கொண்டு இரு விழிகளையும் நன்றாகக் கசக்கினாராம். 'இப்போது எனது விழிகள் சிவந்திருக்கின்றனவா!' என்று சீர்காழியாரைப் பார்த்துக் கேட்டாராம். தந்தையார் பிரமித்துப் போய்விட்டாராம்! இப்படியும் ஒரு கலைஞனா! நடிப்பிற்காகக் கண்களைக் கூடப் புண்ணாக்கத் துணிந்து விட்டாரே சிவாஜி என்று தந்தையார் வியப்புடன் கூறியதை நினைவு படுத்தினார் டாக்டர் அவர்கள்.

அப்படித்தான் 'பாசமலர்' இறுதிக் காட்சி மிகவும் உணர்வு பூர்வமாக அமையவேண்டும் என்று சிவாஜி நினைத்தார். முதல்நாள் இரவு முழுவதும் அவர் தூங்கவில்லை. தயாரிப்பாளர் 'மோகன்' ஆர்ட்ஸ் மோகனை வீட்டிற்குக் கூட்டிச் சென்று விடிய விடிய தனது வீட்டில் உள்ள மினி தியேட்டரில் தொடர்ச்சியாக ஆங்கிலப் படங்களைப் போட்டுப் பார்த்து நித்திரை முழித்தார். படம் ஓட்டிய ஒபரேட்டர் களைப்படைந்து இனி முடியாது என்று வீடு திரும்பி விட்டாராம். மோகனும் வீடு திரும்பி விட்டார். ஆனால் சிவாஜி தூங்கவில்லை. தூங்கக் கூடாது என்பதற்காக உடற்பயிற்சி செய்வது போல் வீட்டைச் சுற்றி ஓடத்தொடங்கியுள்ளார். தாயாருக்கும் மனைவி கமலா அம்மாவிற்கும் ஒன்றுமே புரியவில்லை. இவருக்கு இன்று என்ன நடந்தது என எல்லோருக்கும் ஆச்சரியம்! அவர் தன்னை வருத்திக் கொண்டிருந்தார் ஏன்? அது தான் சிவாஜியின் தொழில்பக்தி எடுத்துக் கொண்ட பாத்திரம் நிலைக்க வேண்டும் என்ற இலட்சியம்.! காலையில் குளித்துவிட்டுப் படப்பிடிப்பு நிலையம் செல்கிறார். ஒப்பனை ரெடியாகிவிட்டது. இயக்குநர் பீம்சிங் வந்து சிவாஜியின் முகத்தைப் பார்க்கிறார். மிகவும் பரிதாபப்படுகிறார். உடல் நிலை சரியில்லையா.. படப்பிடிப்பை ஒத்திவைப்போமா என்று சிந்திக்கிறார். சிவாஜியோ படப்பிடிப்பிற்குரிய தனது வசனங்களைச் சரிபார்க்க வேண்டுமென்கிறார். இறுதிக் காட்சி ஏழு பக்க வசனங்கள். சாவித்திரியுடன் தனக்குள்ள வசனங்களைச் சரி பார்த்துக் கொள்கிறார்.

தொடர்ச்சி 12 பக்கம்


## யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்பு கணித்தல்
- பலன் பார்த்தல்
- எண் சோதிடப்படி

ஆலோசனை கூறுதல்

☎: 299-8361

COMPUSERVICE International
COMPUTERS & NETWORK
COMPUTERSALES REPAIRS
NEW & USED UPGRADES
NETWORK DESIGN CD BACKUPS
& INSTALLATION SOFTWARES
Call ALAN SIVA @ (416) 431-3753 * 438-4357 *399-3235
(905) 432-2422 *Fax: (416) 431-5828
Email : compuservice@pathcom.com

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்



## பகுதி (15)

கடந்த அத்தியாயத்தில் வகுப்பறையில் வழங்கப்படும் சாரதி பயிற்சி நெறியினூடாக வாகனம் செலுத்துதலில் அறிவியல் ரீதியாகவும், அவ்வாறு ஒரு பாதுகாப்பான சாரதி உருவாக்கின்றார் என்பதனை மேலோட்டமாக பார்த்தோம். இம்முறை இவ் வகுப்பறைப் பயிற்சியில் உள்ள பாடத்திட்டங்கள் பற்றி ஆய்வு செய்வோம்.

பாடத்திட்டம் (1) (a) -Introduction 2 Benefits of "Driver Education Course"
("வாகன சாரதி பயிற்சி நெறி" யின் அறிமுகமும் அதன் நன்மைகளும்)

கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்ட கட்டுரையினை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம். ஆழமான கற்பனை வளமும், உளவியல் ரீதியான மனோ வலிமையும் இப் பயிற்சியில் எவ்வாறு செயல்படுகின்றது என்பதுடன், இப்பயிற்சி நெறியின் முடிவில் வழங்கப்படும் "சான்றிதழ்" எவ்வாறு உபயோகமாகின்றது. இதுவே இங்குள்ள முக்கியமான தலைப்பாகும்.

b) - The car in Canadian Society (கனடா சமூகத்தில் கார்கள்)

கனடாவின் வீதிகளில் பல நூற்றுக்கணக்கான விதங்களில் விதம் விதமான கார்கள், வாகனங்கள் தினமும் ஊர்ந்து கொண்டேயுள்ளது. ஒரு கம்பனியின் உற்பத்தியில் பல்வேறு வகையான கார்கள் சில அம்சங்களினால் மட்டும் வேறுபடுகின்றது.

உதாரணமாக கனடாவில் பிரபல்யமாக உள்ள ஜப்பான் நாட்டு உற்பத்தியான "ரொயற்றா" (Toyota) வாகனத்தினை எடுத்துக் கொள்வோம். ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்டு உலகில் முக்கியமாக வட அமெரிக்காவில் பிரபல்யமான இக்கார் இப்போது ஜப்பான் கம்பனிகளினால் அமெரிக்காவிலும், கனடாவிலும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

1. ரொயோற்றா கொறோல்லா (Toyta Corrolla)
a. Corolla LE — B Corolla CE — C. Corolla VE

2. ரொயோற்றா ரேசல் (Toyota Tercel)
Tercel 4 Door C.E — Tercel 2. Door C.E

3. ரொயோற்றா காம்ரி (Toyota Camry)
Camry XLE V.6 — Camry LE — Camry CE/CE V6

4. ரொயோற்றா பாசியோ (Toyora Paseo)
(இரு கதவுகளை மட்டும் கொண்ட கார்)

5. ரொயோற்றா சிலிக்கா (Toyota Celica)
(இரு கதவுகளை மட்டும் கொண்ட கார்)

6. ரொயோற்றா ராவ் -4 (Toyota Rav-4 1999)
Rav 4 -4WD- 4_Door (நான்கு கதவுகளை கொண்ட சிறு வான் மாதிரி தோற்றம்) — Rav 4 -4 WD 2 Door (இரு கதவுகளை கொண்ட ஒரு சிறு வான் மாதிரி தோற்றம்) — Rav 4 Soft Top FWD (சிறு"Pick up Van" மாதிரி தோற்றம் கொண்டது.)

7. ரொயோற்றா காம்றி சொலாரா (Toyota Camry Solara)
Camry Solara SLE V6 — Camry solara SE V6 — Camry Solara SE
(இரு கதவுகளை மட்டும் கொண்ட வாகனம்)

8. ரொயோற்றா சீய்ன்னா (Toyota Sienna)
Sienna XLE — Sienna Le — Sienna CE
(சாரதி உட்பட மொத்தம் ஏழுபேர் அமர்ந்து செல்லக்கூடிய வான்)

9. ரொயோற்றா ராகோமா (Toyota Tacoma)
Tocoma 4X4 XTRA CAB — TOCOMA 4X2 — TOCOMA 4X2 X TRACAB
இது முற்று முழுதாக "Pick Up Van" ஆகும்.

10. ரொயோற்றா அவலோன் (Toyota Avalon)
Avalon XLS — AVALON XL
(சற்று ஆடம்பரமான நான்கு கதவுகளை கொண்ட கார்)

11) ரொயோற்றா 4 றன்னா (Toyota 4 RUNNER)
4. RUNNER LIMITED — 4 RUNNER SR5 V6 — 4 RUNNER SR5
(ஜீப் மாதிரி வடிவில் அமைந்த வாகனங்களே இவைகள் ஆகும்)

மேற்கூறிய அம்சங்கள் யாவும் 1999ம் ஆண்டின் உற்பத்தியினை அடிப்படையாக வைத்து பெறப்பட்டதாகும். அதன் அம்சங்கள், வடிவ அமைப்புகள், செயல்படும் வலு, உதிரிப் பாகங்களின் வலிமை, அளவு ஆகியவற்றில் வேறுபடுகின்றது. இவ்வேறுபாட்டுக்கு அமைய அதன் விலைகளும் வேறுபடுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டவை கனடா வீதிகளில் உள்ள வாகனங்களில் ஒரு குறிப்பிட்ட கம்பனியின் உற்பத்தியினை உதாரணமாக குறிப்பிட்டோம். இதே மாதிரி பல கம்பனிகளும் பல ரகங்களில் உற்பத்தி செய்து பாவனைக்கு விடப்பட்டுள்ளன. பலநாடுகளின் உற்பத்தி வாகனங்களும் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

வகுப்பறை சாரதி பயிற்சி நெறித்திட்டத்தில் மேலோட்டமாக வாகனங்களை பற்றியும் அதன் ரகங்களைப் பற்றியும் புரிந்து கொள்வதற்காக இத் தலைப்பில் கற்பிக்கப்படுகின்றது.

(தொடரும்)

*மேலதிக தொடர்புகளிற்கு: **சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999***
(Professional Licensed Instructor in Car & Class Room)

**EZ DRIVING SCHOOL**



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
*JEYAKUMAR* ✆ (416) 283-4100 Cell: 822-6741
(10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

Banana Leaf

**BANANA LEAF**
**Take-out & Catering**

**Everyday Special**
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

**தினமும் ஸ்பெஷல்**

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | *LampRice* | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)

**J DAYCARE**



- 7 மாதம் தொடக்கம் ь வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1Hr. - $2.00
Day - $15.00
Week -$60.00


தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா
தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் (416) 502-3033
*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro, Ont. M1W 2J9*

**V.N.T. AUTO COLLISION**

* Complete Collision Service
*Unibody Frame Straightening
* Under Coating & Rust Proofing
* All Mechanical & Electrical Repairs
* உட்புற வெளிப்புற பராமரிப்பு
*Tuneup & Brakes
* Oil Change & Lubrication
*Insurance Claims
*Free Estimates



200 FULLER ROAD
UNIT #4A
PICKERING, ONT.
TEL: (905) 426-5136



## சூரியக்குடும்பம் 16 — விண்வெளி

*தருபவர்- கனி*

இன்று சூரியனின் புறப்பகுதியைப் பற்றிப் பார்ப்போம். எமது பூமிக்கு பூமியைச் சுற்றி வளிமண்டலம் இருப்பது போல, சூரியனுக்கும் சூரியனைச் சுற்றி ஒரு வளிமண்டலம் உண்டு என்கின்றார்கள். இச்சூரிய வளிமண்டலத்தை ஊடறுத்தே சூரியனின் உட்பகுதியில் இருந்து சக்தி வெளிவருகிறது. அதன் காரணத்தால் அப்பகுதி பிரகாசிப்பதுடன் எமக்குத் தெரியும் சூரிய நடவடிக்கைகள் எல்லாம் இப்பகுதியில் அல்லது இப்பகுதியில் இருந்தே நடைபெறுகின்றன. சூரியனின் மையப் பகுதியை ஆய்வு செய்வதற்கும் இந்தச் சூரிய வளிமண்டலத்தையே பெரிதும் விஞ்ஞானிகள் நமபியிருக்கின்றார்கள்.

இந்தச் சூரியனின் வளிமண்டலத்தை சில பகுதிகளாக விஞ்ஞானிகள் [illegible]த்திருக்கின்றார்கள். முதலாவது பகுதி Photosphere எனும் பிரகாசமான பகுதியாகும். இதனை சாயாக்கோளம் எனலாம். சில ஆயிரம் பாகை வெப்பநிலையில் (சுமார் 5000- 6000 இடையே) உள்ள பகுதியான இப்பகுதி சூரியனின் மையப்குதியுடன் ஒப்பிடும்போது மிகமிகக் குளிர்ந்த பகுதியாகும். சுமார் 500 கிலோ மீற்றர் தடிப்புள்ள இப்பகுதியில் இருந்தே சூரியனின் பெரும்பகுதி வெளிச்த்தை நாம் பெறுகின்றோம்.

இதனை அடுத்து சுமார் 10,000 கிலோமீற்றர் தடிப்புடைய அடுத்த பகுதி காணப்படும். Chromoshpere எனப்படும். இப்பகுதியை நிறக்கோளம் என்போம். இப்பகுதி சாயாக் கோலப்பகுதியை விட வெப்பமானதாகவும் அடர்தி குறைந்ததாகவும் காணப்படும். இதன் வெப்பநிலை சுமார் 10,000 பாகையில் இருக்கும் என்கின்றார்கள். இதன் கருத்து முடி அல்லது கிரீடம் என்பதாகும். செந்நிற ஒளியில் இருக்கும் நிறக்கோளப் பகுதியை அடுத்துக் காணப்படும் கெலனா எனும் முப்பகுதி வெண்ணிற ஒளியைத் தருகிறது. மிகவும் அடத்தி குறைந்த இப்பகுதியின் வெப்பநிலை சுமார் 500,000 பாகையில் இருக்கும். சூரியனின் இப்குதியை மாத்திரமே வெற்றுக் கண்களால் அதுவும் பூரணசூரிய கிரகணத்தின் போது மட்டும் அவதானிக்க முடியும்.

இந்த கொரனோ எனும் முடிப்பகுதியில் அபமிரிதமான வெப்பநிலையின் காரணமாகவும், அதன் மிகக் குறைந்த அடர்த்தியின் காரணமாகவும் சில வாயுத்துணிக்கைளும் அணுக்களும் அள்ளுண்டு சூரியனை போவதுண்டு. இதனையே Solar Wind - சூரியக் காற்று என்பார்கள். அச்சமயம் அணுக்களில் இருந்து பிரிகையடைந்த இலத்திரனகளும் ஐதரசன் அணுக்கருவும் அள்ளுண்டு சூரியனை விட்டு வெளியே போகும். ஏற்றம்பெற்ற அணுக்கருக்களை கொஸ்மிக் கதிர்கள்" (Cosmic Rays) என்பார்கள்.


[illegible]று இத்துடன் முடிவுக்குக கொண்டு அடுத்த தடவையில் சூரியனின் இறுதிக் காலம் பற்றிப் போர்ப்போம்.


# RUBAN PEST CONTROL

**Complete Elimination of Roaches & Mice**

No Spraying
No Smelling
No Moving

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், கடைகள் அனைத்திலும் பூச்சி, எலிகள் தொல்லையா? கவலையை விடுங்கள். அறவே ஒழிக்கஅழையுங்கள்

காந்தன் :(416) **894-9538**



## புதிய இடத்தில்

# மஞ்சுளா பாஷன்

8 வருடங்களிற்கு மேலாக ஸ்காபரோவில் மக்களின நன்மதிப்பை பெற்று இயங்கி வரும் மஞ்சுளா பாஷன் தமிழ் மக்களின் நன்மை கருதி புதிய இடத்திற்கு ஆகஸ்ட் 30ந் திகதியிலிருந்து இடம் மாற்றப்பட்டுள்ளது.

ஆண்கள் பெண்கள், சிறுவர், சிறுமியருக்கான இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் உடைகளையும் கனேடிய உடுப்பு வகைகளையும் மிகமிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய முகவரி - **5635 Finch Ave. E. #3**
**Scarborough (Tapscott Road / Finch)**
(நாகபூசணி அம்மன் கோயிலிற்கு அருகிலுள்ள கட்டடத்தில்)
தொடர்புகளிற்கு- **(416) 297-9875**

**மலிவின் மறுபெயர் மஞ்சுளா பாஷன்**



நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்

# செறண்டிப்

## (F) பிறஸ் மார்க்கட்

நாளாந்த பாவனைக்கு
தேவையான சகல
பொருட்களையும்
நாளாந்தம் மலிவு
விலைகளில் ஒரே
இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
இடம்




**SERENDIB FRESH MARKET**

**Tel: (416) 269-9913**

2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2





# ANDY THIRUCHELVAM

(செல்வம்)

**Assistant Used Car Manager**
**Sales & Leasing Consultant**


Tel: (416) 741-8111 Cell: (416) 418-6076
Tel: (905) 850-8111 Pager: (416) 541-4277

***MAZDA* TOYOTA* HONDA* NISSAN***

போன்ற வாகனங்களின் **1999 Model** களையும் மற்றும் சகலரக **Used** வாகனங்ளையும் ஒரே இடத்தில் பார்வையிட்டு தமிழில் பேசி குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**1.9%** on **All 99 Mazda Models**

Lower Financing



**OVER 75 USED CARS & VANS AVAILABLE FOR LEASE OR PURCHASE**


- *BAD CREDIT, NO CREDIT, NO PROBLEM *
- NO CREDIT APPLICATION REFUSED

உங்கள் வருமானத்திற்கு ஏற்ப மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தக் கூடியவாறு வாகனக் கடனுதவி துரிதமாக ஒழுங்கு செய்து தரப்படும்.

Get in. Be moved — mazda

Prima mazda

**7635 MARTINGROVE ROAD**
**WOODBRIDGE (SOUTH OF HWY #7)**






# ஸ்கந்தவரோயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாக் கிளை

வருடாந்த இராப்போசன விருந்தும், கலைநிகழ்ச்சிகளும் -1999

எமது சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்தும், கலைநிகழ்ச்சிகளும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பின்வரும் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Our Lady of Fatima Hall
3170 St. Clair Ave. E. Scarborough, Ont, M1L 1V6

தொடர்புகளுக்கு C. ராஜரட்ணம் 412 1164 — சிவ. பஞ்சலிங்கம் 321-0999
S. சக்திவேல் 289-1380 — K. ரட்ணசிங்கம் 496-1646

# RENOVATION
## KATHIR & ASSOCIATES



- ✲ Complete Basement
- ✲ Bath Rooms
- ✲ Kitchen
- ✲ Plumbing
- ✲ Painting

போன்ற உங்களின் சகல விதமான திருத்த
வேலைகளிற்கும் அழையுங்கள் : (416) 918-8349


## கொண்டூரஸ் (Hunduras)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரோம சட்டம், மற்றும் ஸ்பானிஷ் குடியுரிமை சட்டம், ஆங்கில பொதுவான சட்டங்களை அடிப்படையாக கொண்டு பதினெட்டு திணைக்களங்களாக பிரிக்கப்பட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் மந்திரி சபையினால் நிர்வாகம் நடாத்தப்படுகின்றது.

பதினெட்டு வயதினை அடைந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட இந்நாட்டில், பூமி அதிர்ச்சி, மண் அரிப்பு, மற்றும் கருபியன் கடலிலல் இருந்து புயல் காற்றுகள் அதிகமான அடிக்கடி உருவாகி ஆபத்துக்களை உருவாக்குவது வழமையாகும்.

வெப்ப வலய நாடான இங்கு குறிப்பிட்ட சில காலத்தில் (மார்ச் - அக்டோபர்) பகலில் கடுமையான வெயில் வெப்பமும், இரவில் கடும் குளிருமாக இருக்கும். தொடர்ச்சியாக சில காலங்கள் மழை காலங்களும், செப்ரெம்பர் மாதத்தில் மிகவும் கடுமையான மழையுமாக இருக்கும்.


வாழை, கோப்பி, ஆகிய விளை ப பயிர்கள் பயிர் செய்கை செய்யப்படும். தலைநகருக்கு அப்பால் விஜயம் செய்பவர்கள் மலேரியா, மஞ்சள் காய்ச்சல் போன்ற தடுப்பூசி போடப்படல் வேண்டும் என்பது எச்சரிக்கையுடன் வலியுறுத்தப்படுவது ஆகும். மொத்தமாக ஐந்து தினசரி பத்திரிகைகள் இங்கு வெளியிடப்படுகின்றது.

## மாதகல் மக்களின் ஒன்று கூடல்

கனடா வாழ் மாதகல் மக்களின் வருடாந்த ஒன்று கூடலும், சிறுவர் பெரியோருக்கான விளையாட்டு போட்டிகளும் அதிஸ்ட லாபச் சீட்டிழுப்பும், பரிசளிப்பும் மதிய போசன விருந்துபசாரமும், மாதகல் நலன்புரிச் சங்க புதிய நிர்வாக சமைப்கான தெரிவும் இடம்பெறவுள்ளது. அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**இடம்** - செடாபுறூக் பூங்கா (மார்க்கம் & லோரன்ஸ்)
**காலம்** -05.09.1999 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** - காலை 9:30 - மாலை 5:30 வரை
**தொடர்புகட்கு** - (416) 609-1314 / (416) 609-0355


## ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883

## RAAJ WATCH WORK



சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.
NATHAN ☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)

# கலைமகள்
## புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605


3850 FINCH AVE. E. GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9,
Newin Centre Mall, Mississauga, Ont.
☎: (905) 306-0494

# SAMSON BEDDING AND FURNITURE
## BLOW OUT SALE - FACTORY OUTLET

LAY AWAY / FINANCING AVAILABLE NO INTEREST FOR SIX MONTHS or NO G.S.T / P.S.T.
(905) 673-6747 WE DELIVER (905) 673-1300




| | S-TOP 5YR. W MATTRESS | 15 YR W MATTRESS | 25 YR W MATTRESS | 25 Y W DE LUXE MATTRESS | 30 YR W MATTRESS | 30 YR W PILLOW TOP |
|---|---|---|---|---|---|---|
| SINGLE | $ 60.00 | 85.00 | 100.00 | 130.00 | 150.00 | 200.00 |
| DOUBLE | $ 80.00 | 100.00 | 140.00 | 170.00 | 200.00 | 250.00 |
| QUEEN | $100.00 | 120.00 | 150.00 | 200.00 | 250.00 | 300.00 |
| KING | | | | 300.00 | 350.00 | 400.00 |

VISA
M/CARD
AMEX

BUSINESS HOURS
WEEKDAYS ...10-7pm
SATURDAY ...10-6pm
SUNDAY .......11-5pm

SPECIALISTS - CUSTOM-MADE FURNITURE AREA RUGS, LAMPS, BRASS ITEMS ANY REASONABLE OFFER MUST BE ACCEPTED.

7171 TORBRAM RD. UNIT 32
MISSISSAUGA, ONTARIO
(905)673-6747 * 673-1300


## பெண்கள் உலகின் கண்களா?

(சென்ற இதழ் தொடர்ச்சி) -கலைமணி



உலகிலே யாருமே யாருமாய்ப் பிறப்பதில்லை. கொலைகாரன் கூட ஏதும் அறியாத பச்சிளம் பாலகனாய்த் தான் பிறக்கிறான். விஞ்ஞானியும், மெஞ்ஞானியும் அரசனும், ஆண்டியும் தியாகியும் துரோகியும் அப்படியே. அப்படி என்றால் எப்படி ஒவ்வொரு குழந்தையும் கருவாகித் திருவாக்கப்படுகிறது. அப்புறம் அந்தப் பிள்ளை பிறந்த பின் அதன் நிலை குயவன் கையில் களிமண். ஆகவே தாயின் கையில் சிசுவும் குயவன் கையில் களிமண்ணும் சமநிலைப்படுகின்றன.

குயவன் களிமண்ணைத் தட்டி உருட்டி சட்டி, முட்டி, பூச்சாடி, கூசாவாக ஆக்குகிறான். அதேபோல்த் தாயும் தன் சிசுவை தன் தாய்ப்பாலுடன் அறிவு, அன்பு, பண்பு, ஆற்ற பக்தி, கருணை போன்ற ஞானப் பாலையும் சேர்த்து ஊட்டி நற்பிரஜை உருவாக்குகிறாள். ஆகவே பெண்கள் உலகின் கண்களல்ல பெண்களே உலகமா மாறுகிறார்கள். இப்படியாக வருங்கால உலகத்தை உலகத்தின் உருவாய்த் திகழ போகும் பிரச்சனைகளை உருவாக்கும் சிருஷ்டி கர்த்தாவாக திகழ்கிறாள்.


புவியியலில் உலகம் உருண்டை என்றுதான் படித்தோம். அந்த உலகத்திற் நிறமில்லைக் குணம் இல்லை. அத்தனை நாட்டு பிரச்சனைகளும்தான் உலகத்தை வாழவைக்கும் ஊடகமாகவும், கருப்பொருளாகவும் அடி நாதம மிளிர்கிறார்கள். இவ்வளவுக்கும் காரண கர்த்தா பெண்தானே. ஆகவே அவ உலகின் கண்கள் அன்றி வேறென்ன? அணைத்து வளர்ப்பவளும் அவள் அணைப்பி அடங்குபவளும் அவளே.

வண்டி இழுத்துப் பிழைப்பவனும், வான் ஊர்தியில் பறப்பவனும், வானை அளந் ஞானிகளும், ஏன் தேவரும் மூவரும் கூட தன்னை மறந்ததும் வாழநினைப்பது பெண்ணாலே என்பதை யாரும் மறுக்க முடியுமா?

ஒரு சிறிது நேரம் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் குடும்பத்தையே உதாரணத்திற் எடுத்துக் கொண்டால் காலை கண்விழித்தெழுந்து இரவு உறங்கப் போகும் வரை பெ பம்பரம் சுழல்வதுபோல தன் கடமைகளைச் செய்து முடிக்கிறாள். பெண்ணைப்போ ஒரு ஆணால் அப் படியெல்லாம் பொறுமையாகவும் திறமையாகவும் அழகாகவும் ஒ குடும்பத்தை ஆக்க முடியுமா? அதனால்த் தான் அவள் சக்தி என்ற பெயரை பெறுகிறாள்.

இப்பெண்ணின் அருமை அறிந்துதான் ஔவையார் கீழ்க் கண்டவாறு
"தாயோடு அறுசுவைபோம்
தந்தையோடு கல்வி போம்
சேயோடு தாம்பெற்ற செல்வம் போம்
பொற்றாலியோடு இவை எவையும் போம். என்று அழகாகப் பாடியுள்ளா
இக்கூற்றை யாரும் மறுக்க முடியுமா?

(தொடரும்)




## நீங்கள் வாங்கும் நிரு பிராண்ட் தயாரிப்புக்களின் வெற்று உறைகள், லேபல்கள் அனைத்தும் சேகரித்துவிட்டீர்களா?

**உங்கள் பரிசில்களைப் பெறுவதற்கு**

**நேரடியாக:** திங்கள் - வெள்ளி காலை 8:00மணி தொடக்கம் மாலை 2:00 மணி வரை கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள எமது அலுவலகத்தில் வந்து சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தபால் மூலம்:** வெற்று உறைகளின் லேபல் பகுதியைக் கத்தரித்து மற்றைய லேபல்களுடன் கீழே உள்ள விலாசத்திற்கு அனுப்பவும். உங்கள் தபால் கிடைத்த 2 வாரங்களுக்குள் உங்கள் வாடிக்கைக் கடையில் உங்களுக்குரிய பரிசினைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து உங்களுக்குத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

**படிவங்கள் முழுமையாக பூரணப்படுத்தப்படல் வேண்டும்.**
**படிவத்தில் அல்லாத நிரு வெற்று உறைகளுக்கு லேபல்களுக்கு தலா 10 புள்ளிகள் வழங்கப்படும்.**

அனுப்பவேண்டிய முகவரி: **NIRU ENTERPRISE INC.**
**76 Howden Road**
**Scarborough, Ont. M1R 3E4**

**நிரு வெற்று உறைகள் லேபல்களைச் சேகரித்து பெறுமதிமிக்க பரிசுகளைப் பெறுங்கள்.**

தொகுதி A இல் உள்ள ஒவ்வொன்றிற்கும் தலா 20 புள்ளிகளும், தொகுதி Bயில் உள்ளவற்றிற்கு தலா 15 புள்ளிகளும், தொகுதி C யில் உள்ளவற்றிற்கு தலா 10 புள்ளிகள் வீதமும் கணக்கிடப்பட்டு ஒவ்வொரு 100 புள்ளிகளுக்கும் ஒரு பெறுமதிமிக்க எவர் சில்வர் தட்டு இலவசமாக வழங்கப்படும். நீங்கள் இதுவரை சேகரித்து வெற்று உறைகள் லேபல்களுடன் இத்துடன் காணப்படும் படிவத்தை நிரப்பி வரும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டு எத்தனை எவர் சிலவர் தட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதை அறிந்து கொள்ளலாம்.

## ஒவ்வொரு 100 புள்ளிக்கும் தலா ஒரு எவர்சில்வர் சாப்பாட்டுத்தட்டு இலவசம்!

பெயர் ______________________________

விலாசம்: ______________________________

______________________________

தொலைபேசி இல: ______________________________


நிரு பொருட்கள் வாங்கும் ஸ்தாபனம் ______________________________

| தொகுதி A (20 புள்ளிகள்) | | புள்ளிகள் x எண்ணிக்கை | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| அமெரிக்கன் பார்பொயில் அரிசி | 20lb | 20 x | |
| கைக்குத்தரிசி | 5kg | 20 x | |
| பஸ்மதி அரிசி | 10lb | 20 x | |
| பசுநெய் | 227gr/454gr | 20 x | |
| வறுத்த சிவப்பரிசி மா | 5kg | 20 x | |
| நல்லெண்ணெய் | 750ml/1li | 20 x | |
| வறுத்த மிளகாய்த்தூள் | 900gr | 20 x | |
| உறைப்புக்கூடிய வறு.மிள.தூள் | 900gr | 20 x | |
| | | | |
| தொகுதி B (15 புள்ளிகள்) | | | |
| கோப்பித்தூள் | 175gr | 15 x | |
| நெத்தலி - தலையற்றது | 200gr | 15 x | |
| அச்சாறு | 400gr | 15 x | |
| மீன் கறித்தூள் | 400gr | 15 x | |
| பத்தியத்தூள் | 400gr | 15 x | |
| சரக்குத்தூள் | 400gr | 15 x | |
| இட்லிப்பொடி | 200gr | 15 x | |
| குரக்கன்மா | 1kg | 15 x | |
| தனி மிளகாய்ததூள் -வறுக்காதது | 900gr | 15 x | |
| மல்லித்தூள் | 900gr | 15 x | |
| இரசத்தூள் | 200gr | 15 x | |
| வறுத்த மிளகாய்த்தூள் | 450gr | 15 x | |
| வறுத்த மிளகாய்த்தூள் Con. | 450gr | 15 x | |
| வறுத்த உழுத்தம் மா | 900gr | 15 x | |
| வறுத்த பயற்றம் மா | 900gr | 15 x | |
| உறைப்புக் கூடிய வறு.மிள.தூள | 450gr | 15 x | |
| | | | |
| தொகுதி C (10 புள்ளிகள்) | | | |
| கெட்டிப்பால் | 300ml. | 10 x | |
| சவ்வரிசி | 450gr | 10 x | |
| வறுத்த உழுத்தம்மா | 450gr | 10 x | |
| ஆட்டாமா | 5lb /10lb | 10 x | |
| அரிசி வெள்ளை | 2kg / 10lb | 10 x | |
| ஓமம் / ஓமத்தூள் | 200gr | 10 x | |
| பார்லி அரிசி | 200gr | 10 x | |
| மிளகு / மிளகுதூள் | 200gr | 10 x | |
| மோர் மிளகாய் | 50gr | 10 x | |
| மல்லித்தூள் | 450gr | 10 x | |
| மல்லி | 200gr / 450gr | 10 x | |
| கறிவாசனைக் கூட்டு | 100gr | 10 x | |
| உடைத்த மிளகாய் | 200gr | 10 x | |
| சி.சீரகம் / சி.சீரகத்தூள் | 200gr | 10 x | |
| வெந்தயம் | 200gr / 400gr | 10 x | |
| பெ. சீரகம் / பெ. சீரகத்தூள் | | 10 x | |
| கரம் மசாலா | 100gr | 10 x | |
| உள்ளித்தூள் | 100gr | | |
| வறுத்த பயறு | 450gr | | |
| வறுத்த சிவப்பரிசி மா | 1kg / 2kg | 10 x | |
| வறுத்த வெள்ளை அரிசி மா | 1kg | 10 x | |
| வறுத்த வெ. அரிசி மா | 900gr/1.8kg | 10 x | |
| எள்ளு கறுப்பு .:.வெள்ளை | 200gr | 10 x | |
| சேமியா | 200gr | 10 x | |
| நிரு சோயா | 250gr | 10 x | |
| கோப்பிக்கொட்டை | 250gr | 10 x | |
| கொர்ஸ் கொஸ் | 450gr | 10 x | |
| செத்தல் மிளகாய் | 100gr | 10 x | |
| கற்கண்டு | 200gr | 10 x | |
| பழப்புளி | 227gr | 10 x | |
| மஞ்சள் | 100gr | 10 x | |
| மஞ்சள் தூள் | 200gr | 10 x | |
| கடலை மா | 900gr | 10 x | |
| வேர்க்கொம்பு/வே. தூள் | 100gr | 10 x | |
| பலாப்பழம் (ரின்) | 500gr | 10 x | |
| சர்க்கரை | 400gr | 10 x | |
| மாசி துகள்கள் | 185gr | 10 x | |
| வேப்பம்பூ வடகம் | 75gr | 10 x | |
| மதராஸ் கறிப்பவுடர் | 200gr | 10 x | |
| பப்ரிக்கா தூள் | 200gr | 10 x | |
| அவல் சிவப்பு / வெள்ளை | 400gr | 10 x | |
| பாவக்காய் வற்றல் | 100gr | 10 x | |
| குத்தரிசி | 1kg | 10 x | |
| மிளகாய்த்தூள் (வறுக்காதது) | 200gr / 450gr | 10 x | |
| மல்லி இலை ஊறுகாய் | 400gr | 10 x | |
| உள்ளி ஊறுகாய் | 400gr | 10 x | |
| எலுமிச்சை ஊறுகாய் | 400gr | 10 x | |
| மாங்காய் ஊறுகாய் | 400gr | 10 x | |
| நெல்லி ஊறுகாய் | 400gr | 10 x | |
| புழுக்கொடியல் மா | 400gr | 10 x | |
| பப்படம் 3", 5" | 175gr | 10 x | |
| கசகசா | 100gr | 10 x | |
| பொட்டுக்கடலை | 400gr | 10 x | |
| தீட்டிய சிவப்பரிசி | 1kg | 10 x | |
| சம்பா அரிசி/ சீரகச்சம்பா | | 10 x | |
| சுண்டங்காய் வற்றல் | 100gr | 10 x | |
| சாம்பார் பொடி | 200gr | 10 x | |
| கடுகு | 200gr | 10 x | |
| அரிசிக்குறுணல் | 900gr | 10 x | |
| கடலைப்பருப்பு | 900gr /1.8kg/5kg | 10 x | |
| மக்கரல் | 318g. | 10 x | |
| | | 10 x | |
| | | 10 x | |
| | | | |
| | | | |
| மொத்தப்புள்ளி | | | |
| தட்டுக்களின் எண்ணிக்கை மொத்தப்புள்ளி / 100 | | | |

FORMULA
HONDA
*In Pace With The Future*

For a Quick
Instant Quote
Call: DAN

- Service
- Sales
- Leasing
- Parts
- Collision



• All Makes
• All Models

754-4555

CALL: LANKA (DAN)

YOUR TRUSTED SRILANKAN SALES REP.

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility

## நான் வாழப் போகிறேன்

(7ம் பக்க தொடர்ச்சி)

முதல்நாள் இரவு முழுவதும் அவர் ஆங்கிலப் படம் பார்த்துக் கொண்டு இருந்தது பொழுது போக்கிற்காக அல்ல...

